தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 36 சுபகிருது வருடம், ஆடி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை
(10.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 11 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

20 மாடி கட்டிடத்திலிருந்து விழுந்த இரும்புக்கம்பி

அதிர்ஷ்டவசமாக தப்பித்த கார் சாரதி

கொழும்பு மாநகர சபைக்கு அருகில் நிர்மாணிக்கப்படும் 20 மாடி கட்டிடத்திலிருந்து விழுந்த இரும்புக்கம்பியொன்று காரை துளைத்து உள்ளே நுழைந்துள்ளது.

காரின் முன் பகுதியில் உட்கார்ந்திருந்த சாரதி சிறிய காயத்துடன் அதிர்ஷ்டவசமாக தப்பித்துள்ளார். ளிபொருள் பெற வரிசையில் காத்திருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இலஞ்ச வழக்கில் ஜோன்ஸ்டன்

வெளிநாடு செல்லத் தடை

02 பக்கம்

வடக்கு, கிழக்கில் படைத் திணிப்பு!

ஆளுநர் ஜீவன் தெருச் சண்டியர்போல் நடப்பதாக சிறீதரன் எம்.பி. சபையில் சாட்டை

•யோ.தர்மராஜ்

"வடக்கு கிழக்கிலுள்ள சில முன்பள்ளிகளின் பெயர்கள் இராணுவத்தின் தலையீட்டுடன் மாற்றம் செய்யப்பட்டு, சிறுவர்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் இராணுவமயப்படுத்தல் கல்வி முறைமையை திணிக்க முற்படுவது, இன ஒடுக்குமுறையின் மற்றொரு வடிவமாகும். எனவே, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி தொடக்கம் இலங்கைக்கு கடன் உதவிகள் வழங்கும் அனைத்து நிறுவனங்களும் இங்கு நடக்கும் அநியாயங்கள், இராணுவ கெடுபிடிகளை முதலில் கவனத்திற்கொண்டு சிந்திக்க வேண்டும்" - என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் நேற்று ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வில் ஜனாதிபதி ரணில்...

02 பக்கம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம்:

கம்பனிகளால் தாக்கல்செய்யப்பட்ட மனு நீதிமன்றத்தினால் தள்ளுபடி

02 பக்கம்

அமைச்சரவை முடிவுகள்

05 பக்கம்

உணவுப்பொதி, தேநீர் விலைகளில் குறைப்பு

எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை வீழ்ச்சியை கவனத்திற்கொண்டு உணவுப்பொதி ஒன்றின் விலை 10 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தேநீர் கோப்பையின் விலை 30 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அருட்தந்தை ஜீவந்த கைதாவதை தடுக்கக் கோரும் மனுவிற்கு சட்டமா அதிபர் ஆட்சேபம்

அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் கைதுசெய்யப்படுவதை தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக சட்டமா அதிபர் நேற்று (09) உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி நவிந்த டி விக்ரம சிங்க, ஜீவந்த பீரிஸினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..

தமிழ் முதலாளி ஜயாவுக்கும் ஜனாதிபதி சீட்டில் உட்கார்ந்து ஆனந்தம் பெறும் ஆசை வந்ததில் தப்பென ?

கதிர்காமக்கந்தன் திருவிழாவின் ஓர் அங்கமாக தீ மிதிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தை காத்திருக்காவிடின் பேரனர்த்தம் அரங்கேறியிருக்கும்

அதற்கான கௌரவம் இராணுவத்திற்கென்கிறார் ஜனாதிபதி ரணில்

•யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த 9ஆம் திகதி வன்முறையாளர்கள் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்து சட்டத்தரணை முடக்கியிருந்தால் நாடு ஆட்சியை இழந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை முற்றிலும் மாற்றமாக அமைந்திருக்கும்.

02 பக்கம்

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் நாட்டை விட்டு தப்பியோட்டம்



ஜனாதிபதி மாளிகைக்குள் பலவந்தமாக பிரவேசித்த குழுவில் இருந்த கோடீஸ்வர தமிழ் வர்த்தகர் ஒருவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்த தொழிலதிபர், நாட்டின் முன்னணி இரும்புத் தொழில் நிறுவனத்தில் முதலிடம் வகிப்பவர் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழிலதிபர் தற்போது ஆபிரிக்க நாடொன்றில் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

02 பக்கம்

சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய கப்பல்கள் நாட்டுக்குள் அனுமதி

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

சர்வதேச சட்டதிட்டங்களுக்கமைய, சுயாதீன அரசு என்றவகையில் சர்வதேச நாடுகளின் கோரிக்கைகளுக்கமைய வணிக செயற்பாடுகள் உள்ளிட்ட ஏனைய சேவைகளுக்காக இலங்கை துறைமுகத்திற்குள் வருவதற்கு ஏனைய நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவோம். அதன்படி, ஏனைய நாடுகளின் இராணுவக் கப்பல்களுக்கும் தங்களுடைய சேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்கான அனுமதி...

02 பக்கம்

உஷ்

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு வழங்கப்பட்டிருந்த உயர்மட்ட பாதுகாப்பு கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதாக தகவல்.

இது தொடர்பில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், அது அரச மேல்மட்டத்தில் கவனத்திற் கொள்ளப்படவில்லையாம்.

பேராயருக்கு பாதுகாப்பை அதிகப்படமாக வழங்குமாறு அரச மேல்மட்டத் தலைவர் ஒருவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாம். பேராயருக்குத்தான் கடவுள் பாதுகாப்பு இருக்கிறதே. அவருக்கு ஏன் கொமாண்டோ பாதுகாப்பு? என்று கேட்டாராம் அந்த அரச தூவர்.

லாவ்ஸ் எரிவாயுவின் விலையும் குறையலாம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் எதிர்வரும் காலத்தில் லாவ்ஸ் எரிவாயுவின் விலையையும் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் காலத்தில் லாவ்ஸ் எரிவாயுவின் விலையை குறைப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக அறிய முடிந்தது.

02 பக்கம்

மின்கட்டணத்தை 75 வீதம் அதிகரிக்க அனுமதி

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு வழங்கியது

02 பக்கம்

முச்சக்கரவண்டி ஒழுங்குபடுத்தல் கொள்கை ஒரு மாத காலத்துக்குள்

அமைச்சர் பந்துல குணவர்தன

•யோ.தர்மராஜ்

முச்சக்கரவண்டிகளில் மீற்றர் இயந்திரம் இல்லாது வாடகைகளுக்கு அதிக பணத்தைப் பெற்றுக்கொள்வதோடு, பல்வேறு மோசடியான முறையிலும் நடந்துகொள்வதாக பொதுமக்களிடமிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதால், அடுத்த ஒரு மாத காலத்துக்குள் முச்சக்கரவண்டி ஒழுங்குபடுத்தல் கொள்கையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்...

02 பக்கம்

அருட்தந்தை ஜீவந்த...

இந்த மனு எல்.டி.பி. தெஹிதெனிய, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் எனவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார். மனுதாரர் தற்போது தலைமறைவாக இருப்பதாகவும், அவர் கைது செய்யப்படுவதை தடுக்கும் நீதிமன்ற உத்தரவை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி றிபன்சி அர்சகுலத்ன, தனது கட்சிக்காரர் எந்தவொரு சட்டவிரோத செயலையும் செய்யவில்லை எனவும், அடிப்படை உரிமை மனுவில் கோரப்பட்டுள்ள நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த மனு செப்டெம்பர் 1ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முச்சக்கரவண்டி...

ஊக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முச்சக்கரவண்டிகளின் மீற்றர் இயந்திரம் இல்லாது வாடகைகளுக்கு அதிக பணத்தை பெற்றுக்கொள்வதோடு, பல்வேறு மோசடியான முறையிலும் நடந்துகொள்வதாக பொது மக்களிடமிருந்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனால், இலங்கையிலுள்ள அனைத்து முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுத்தேன். அதன்படி, விரைவில் முச்சக்கரவண்டி ஒழுங்குமுறைத் தொடர்பான அதிகாரத்தை போக்குவரத்து சபை எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளோம். அதற்கான அமைச்சரவை பத்திரத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பி அனுமதி பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தனியார் பஸ்களுக்காக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இருக்கின்றது.

அதன்படி, தேசிய போக்குவரத்து சட்டமுறைதில் திருத்தத்தைக் கொண்டுவந்து, பொது மக்கள் பயணிக்கும் அனைத்து சேவைகளின் ஒழுங்குபடுத்தல் அதிகாரத்தையும் பொது போக்குவரத்து சபைக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இந்த நிலையில், ஒரு மாதத்திற்குள் முச்சக்கர வண்டி ஒழுங்குபடுத்தல் கொள்கையை உருவாக்கி, பொது மக்களுக்கும் முச்சக்கரவண்டி தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் பாதிப்பில்லாதவாறு ஒரு சேவைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார்.

இலஞ்ச வழக்கில்...

இலஞ்ச ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பயணத்தடை விதித்துள்ளது.

விசாரணை முடியும் வரை அவர்கள் வெளிநாடு செல்ல தடை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு சதொச ஊழியர்களை தேர்ந்து பணிக்கு ஈடுபடுத்தியதன் மூலம் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக மூவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களை தலா 50ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 1 மில்லியன் இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். அத்தோடு கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் கறிதையைகளையும் சமர்ப்பிக்குமாறும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சதொச முன்னாள் பணிப்பாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சாகீர் ஆகியோருக்கு உத்தரவிட்டப்பட்டுள்ளது.

குறித்த சட்டப்பட்டவர்கள் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிறுக்கிழமை 9 மற்றும் 12மணிக்கு இடையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வடக்கு கிழக்கில்...

விக்ரமசிங்கவின் அக்கிராசன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து ஆற்றிய அக்கிராசன உரையில், பல வருடமாக தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுப்பது அத்தியாவசியமான காரணியாகும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக, பொருளாதார பிரச்சினைகள் உள்ளன. காணி பிரச்சினைகள் பலவுள்ளன. வடக்கு அபிவிருத்திகள் குறித்து நாங்கள் பதிதாக சிந்திக்க வேண்டும். வெளிநாடுகளில் வாழும் இங்கை தமிழ் மக்களுடன் நெருங்கி பெரிதாட்டு இலங்கை மீதக் எட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இந்த நாட்டில் வலிந்த காணாமலாக்கப்பட்ட விடயங்கள் குறித்து பேசவில்லை. எனினும், ஜனாதிபதியுடன் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது இவை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து சென்றுள்ளோம்.

70, 80 வருடங்களாக காணப்படும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இரண்டு பெரும்கட்சிகளும் முன்னின்றுத் ஜனாதிபதி ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. ஆனால், தற்போது தலைமறைவாக இருக்கின்ற ஒருவர் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தருவதாக கூறுகின்றார். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. இதனை நாங்கள் எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்கட்டணத்தினை...

யோ.தர்மராஜ்

புதிய மின்சாரக் கட்டண திருத்தத்துக்கமைய, மின்சாரக் கட்டணத்தை 75சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பொது பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார். அதன்படி, 0- 30 அலகுகளுக்கு 264வீதமும், 31முதல் 60அலகுகளுக்கு 211வீதமும், 61முதல் 90அலகுகளுக்கு 125வீதமும், 91-120அலகுகளுக்கு 89வீதமும், 121முதல் 180அலகுகளுக்கு 79வீதமும் மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொள்முப்பிட்டியினுள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இறுதியாக 2014ஆம் ஆண்டு மின்சார கட்டணத்தை திருத்தினோம். அக்காலப்பகுதியில் மின்சார கட்டணம் 25சதவீதமாக குறைக்கப்பட்டது. மின்சார உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் மூன்று வகையான எரிபொருட்கள் 250சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளன. கடந்த 9ஆண்டுகளில் ஒரு மெட்ரிக் தொன் நிலக்கரியின் விலை 143 டொலரில் இருந்து 321 டொலராக அதிகரித்துள்ளது. ரூபா மதிப்பின்படி கணக்கிடும்போது, 550 சதவீதம் அதிகரித்துள்ளது.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 121ரூபாவிலிருந்து 430ரூபாவாக அதிகரித்துள்ளது. இது 350சதவீத அதிகரிப்பாகும். 2013ஆம் ஆண்டு 90ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் சக்ர என்னெய் விலை தற்போது 419ரூபாவாக உள்ளது. அதாவது, 365சதவீத விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் டொலரின் பெறுமதி 127ரூபாவிலிருந்து 368ரூபாவாக அதாவது 190சதத்தால் அதிகரித்துள்ளது. இவ்வாறான விலை உயர்வுகளின் காரணமாக சுமூக (யூனிட்) மின்சார உற்பத்திக்கான செலவு 16ரூபாவிலிருந்து 32ரூபா வரை உயர்ந்தது.

மின்சார உற்பத்திக்கான செலவு அதிகரிப்புடன், இலங்கை மின்சார சபை 183வீதம் மற்றும் 229வீதம் என இரண்டு முறைகளில் கட்டணத்தை அதிகரிப்பதற்கான இரு முன்மொழிவுகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது. இந்த இரண்டு முன்மொழிவுகளுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கு பதில் நியாயமான கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்ட விதிகளுக்கு அமைய, பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு, நியாயமான கட்டண திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்க ஆணைக்குழு முடிவு செய்தது. அதன்படி, தற்போது ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய 32ரூபா செலவாகிறது என்றபோதிலும், வீட்டுப் பாவனை நுகர்வோரை பாதுகாக்க முழு செலவினச் சமையும் அவர்கள் மீது சுமத்தப்படவில்லை. 30அலகுகளுக்கும் குறைவான நுகர்வினை கொண்ட பிரிவினருக்கு மொத்த செலவில் 25சதவீதம் தற்போதும் அறவிடப்படுகிறது. அவர்களுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

31அலகுகளுக்கு மேல் மற்றும் 60அலகுகளுக்குக் கீழே மொத்த செலவில் 40சதவீதம் அறவிடப்படுகிறது. அவர்களுக்கு 60சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. 61அலகுகளுக்கு மேல் மற்றும் 90அலகுகளுக்கு கீழுள்ள அலகு வகைகளில் இருந்து 50சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. அந்தவகையில், 50சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. அதன்படி, மின்சார நுகர்வோருக்கு தற்போதும் 75சதவீத மானியம் வழங்கப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, மின்நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில் இந்த கட்டணத்திற்குத் தகுதிவாய்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று, 0- 30 அலகுகளுக்கு 264வீதமும், 31முதல் 60அலகுகளுக்கு 211வீதமும், 61முதல் 90அலகுகளுக்கு 125வீதமும், 91-120அலகுகளுக்கு 89வீதமும், 121முதல் 180அலகுகளுக்கு 79வீதமும் மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலா ஹோட்டல்துறை மற்றும் கைத்தொழில் துறைக்கு மானியம் வழங்கும் வகையில் புதிய கட்டண திருத்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆண்டுகளில் டொலரின் பெறுமதி 190சதவீதம் அதிகரித்துள்ளது. எனவே, இந்த மின் கட்டண திருத்தத்தால் ஏற்றுமதி துறையில் உள்ள தொழில்கள் பெரிய அளவில் பாதிக்கப்படாது.

குறைந்த மின்சார நுகர்வைக் கொண்ட கைத் தொழில்கள், ஹோட்டல்கள் மற்றும் பொதுத் தேவைக் கான துறைகளுக்கு இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட 116வீத கட்டண அதிகரிப்புக் பதிலாக, பொதுத்துறைக்கு 39வீத அதிகரிப்பும், கைத்தொழில் துறைக்கு 75வீத அதிகரிப்பும் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சுற்றுலாத்துறைக்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள் 50சதவீத உயர்வு மட்டுமே ஒகஸ்ட் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். ஏனைய 50சதவீத கட்டண உயர்வு இன்னும் மூன்று மாதங்களுக்குப் பிறகு சுற்றுலாத்துறை மீண்டும் வழமைக்கு வரும் வரை ஹோட்டல்களை வட்டியை செலுத்த ஆரம்பித்தது. நுகர்வோர் உத்தரவாத வைப்புத்தொகைக்கான வட்டியை இலங்கை மின்சார சபையும் செலுத்த ஆரம்பிக்க வேண்டும் என நாங்கள் தீர்மானித்தோம். பாதுகாப்பு வைப்புத் தொகையை வட்டியை செலுத்துதல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் தொடங்கும்.

நாடாளுமன்றத்தை...

எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிக்குடு நடத்தாமல் அமைதியான முறையில் அந்த நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப்படையினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அத்தோடு, நிரைவேற்றுத்துறையை பலப்படுத்தும், கட்டத்துறையை முடக்கிய வன்முறையாளர்களை ஒடுக்கி ஜனநாயகத்தை பாதுகாத்த இராணுவத்தினருக்கு நேசத்தின் கௌரவம் உரித்தாகுமெனவும் தெரிவித்தார்.

பெலவத்த, அக்குரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு நேற்று (09) விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, இராணுவத்தினரை சந்தித்து உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாடாளுமன்றத்தைப் பாதுகாத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை இந்த விசேட நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம். பலருக்கு இதன் முக்கியத்துவம் தெரியாது. இந்த நாட்டைப் பாதுகாப்பதும் இந்த நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாப்பதும் உங்களின் தலையாய கடமையாகும்.

மக்களின் இறையாண்மையை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று பிரதான நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், இந்த நாடு கட்டுப்பாட்டை இழக்கும். அரசியலமைப்பு சீர்குலைந்து, ஜனநாயகம் இழந்துவிடும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையிலேயே நீங்கள் நாடாளுமன்றத்தை பாதுகாத்தீர்கள்.

நாட்டில் அன்று வன்முறையாளர்கள் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்து சட்டத்துறையை முடக்கியிருந்தால் நாடு அட்சியை இழந்திருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் நாட்டின் நிலைமை முற்றிலும் மாற்றமாக அமைந்திருக்கும். எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிக்குடு நடத்தாமல் அமைதியான முறையில் அந்த நடவடிக்கையை முன்னெடுத்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜூலை 09ஆம் திகதி முன்னால் ஜனாதிபதி இருந்த நாளாபிதி மாளிகை வன்முறையாளர்களால் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை செலுத்தும் ஜனாதிபதி அலுவலகம் கைப்பற்றப்பட்டது. ஜனாதிபதியிடம் நடைமுறைப்படுத்த எந்த நிறுவனமும் இல்லை. மாலையில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையும் கையகப்படுத்தப்பட்டது. இதனால், அந்த அலுவலகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. அப்போது முன்னாள் ஜனாதிபதி கொழும்பில் இல்லாததாலும், அவர் இருக்கும் இடம் தெரியாததாலும், நானும் பதவி விலகுவேன் என்ற நம்பிக்கையில் எனது வீட்டிற்கு தீ வைத்தார்கள். ஆனால் சேர் எர்னஸ்ட் சில்வா மாவத்தையில் பிரதமர் அலுவலகம் மாத்திரம் இருந்தது.

கடந்த 13ஆம் திகதி திறம்பி வந்து பிரதமர் அலுவலகத்தை கைப்பற்றினர். அப்போது நிர்வாகத்தை இயக்க எந்தவொரு அலுவலகமும் இல்லை. அப்போது ஜனாதிபதி இருந்த ஜனாதிபதி மாளிகையும் இல்லாமல் போய்விட்டது. நிறைவேற்றத்துறையாக, இயங்குவதற்கு எந்தவொரு இடமும் இருக்கவில்லை. மாலையில் நிலைமை மாறியது. நாடாளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர். நாடாளுமன்றத்தை கைப்பற்றினால், சட்டத்துறையை அமுல்படுத்த முடியாது. சட்டத்துறையை அமுல்படுத்த முடியாவிட்டால், நாட்டில் அரசாங்கம் ஒன்றிருக்காது.

நீதிமன்றத்தை சுற்றிவளைத்து நீதிமன்றத்தின் செயற்பாடுகளை நிறுத்தவது என்பதை நாடாளுமன்றத்தை இழந்தால் அது பொலிஸ் பாரச்சினையாகிவிடும். அன்றைய தினம் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று. இந்த குழு வருவதை அறிந்தும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தை சாமாசங்கர் நிறைவு செய்தார்.

நாடாளுமன்றத்தை பாதுகாக்க யாரும் இருக்க வில்லை. நாடாளுமன்றம் வீழ்ந்தால் அரசியலமைப்பு பறிபோகும். எனவே, அவ்வேளையில் பாதுகாப்புச் சபையின் தலைவர்களிடம் குறிப்பாக சபேந்திர சிவா, இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் வியனகே ஆகியோரிடம் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்குமாறு கூறினேன். நாடாளுமன்றத்தை இழந்தால் நாட்டில் ஆட்சியே இல்லாமல் போகும். நாடாளுமன்றம் இல்லாதால், பாதுகாப்பு அமைச்சரை செயற்படுத்த முடியாது. அதனால்தான் உங்களிடம் அந்த பொறுப்பாட்ட உட்பட அனைத்து சங்கங்களும் கூட்டாக கோரிக்கை விடுத்தன. இதனை ஏற்பதற்கு முதலாளிமார் சம்மேளனம் மறுத்துவிட்டது.

கூட்டு ஒப்பந்தம் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாமல்போனதால், தொழில் அமைச்சு தலையிட்டது. அதன்பின்னர் சம்பள நிர்ணய சபை ஊடாக நாட் சம்பளாக 1000ரூபா நிர்ணயிக்கப்பட்டது. இந்த மூவரை முதலாளிமார் சம்மேளனம் ஏற்கவில்லை. சம்பள நிர்ணய சபையின் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினர்.

இது தொடர்பான மனு இன்று (09.08.2022) விசாரணைக்கு வந்தபோது, மேன்முறைப்பீட்டு நீதிமன்றத்தால் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என வும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "மேன்முறைபீட்டு நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு தொழிலாளர்களுக்கும், காங்கிரஸுக்கும் கிடைத்த வெற்றியாகும். அதேபோல தொழிலாளர்களை அடக்கி ஆலாம் என எவருக்கும் நினைக்கக்கூடாது.

வாழ்க்கை செலவுக்கேற்பவே சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளம் நிர்ணயிக்கப்படும். தற்போது வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது.

எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பது குறித்து இன்று விடே கலந்துரையாடல் ஒன்று தொழில் அமைச்சில் இருப்பதாகவும், இதன்போது, இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் கட்சியின் உயர்பீடத்தின் ஏனைய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச...

வழங்குவோம் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் தினைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டதாபோது, பாகிஸ்தான் கப்பலுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது குறித்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு அமைய, கயாதீன அரசு என்ற வகையில் சர்வதேச நாடுகளின் கோரிக்கைகளுக்கு அமைய வணிக பெருந்துறைகள் உள்ளிட்ட ஏனைய சேவைகளுக்காக இலங்கை துறைமுகத்திற்குள் வருவதற்கு ஏனைய நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதி வழங்குவோம். அதன்படி, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் இராணுவக் கப்பல்களுக்கும் தங்களுடைய சேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கான அனுமதி வழங்குவோம்.

இந்த நிலையில், சீனக் கப்பல் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர், அமைச்சரவைக்கு தெளிவூட்டினார். அதன்படி, எரிபொருள் தேவையை பூர்த்தி செய்துகொள்வதாக 2022 ஒகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடவுள்ள சீனக் கப்பலுக்கான இராஜதந்திர மட்ட அனுமதியை வெளிவிவகார அமைச்சினால் 2022 ஜூலை 12ஆம் திகதி சீனத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், மேலதிக ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்காக சீனக் கப்பல் அம்பாந் தோட்டை துறைமுகத்திற்கு வருவதை தாமதிக்குமாறு வெளிவிவகார அமைச்சினால் சீனத் தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும், சீன மற்றும் இலங்கைக்கு இடையிலான நட்புறவை பேணுவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், சீனாவின் கொள்கைகளுக்கமை இலங்கையினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் குறித்தும் வெளிவிவகார அமைச்சர் சீனத் துதுவருக்கு விளக்கமளித்துள்ளார்.

எனவே, சீனக் கப்பல் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் இராஜதந்திர மட்டத்தில் கையாண்டுவருகின்றனர் - என்றார்.

ஜனாதிபதி மாளிகைக்குள்...

ஜனாதிபதி மாளிகைக்குள் வலுக்கட்டாயமாக பிரவேசித்தமை இந்த வார்தனா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த தொழிலதிபர் தனது கையடக்கத் தொலைபேசியில் செல்பி எடுத்து சமூக வலைகளில் பகிர்ந்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்ட புகைப்படங்கள் தற்போது தொழில்திபருக்கு எதிரான சாட்சியமாக மாறியுள்ளதாக பொலிஸ் தலைவர்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி இல்லத்தில் அத்துமீறி நுழைந்து சொத்துகளை திருடியமை தொடர்பில் இதுவரை 15தற்கேதபர்கள் கைது செய்யப்பட்டுள்ள்தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்குள் பலவந்தமாக நுழைந்து கேதப்படுத்தியதாக கூறப்படும் 45வரை இதுவரை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

லாவ்ஸ் எரிவாயுவின்...

இது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, லாவ்ஸ் எரிவாயு விநியோகம் மற்றும் விலை தொடர்பாக நுகர்வோரிடத்திலிருந்து ஏதேனும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் அது குறித்து ஆராய்ந்து, ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியுமா என்பதை ஆராயமுடியும் நுகர்வோர் அதிகார சபைக்கும் அதற்கு பொறுப்பான அமைச்சருக்கும் தெரியப்படுத்தவுள்ளேன் - என்றார்.

ஆட்சிக்கு வரும் அனைத்து ஆட்சியும் தமிழ் பகுதிகளில் முன்னெடுப்பது மக்களை மேலும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. எனவே, முன்பள்ளிகளுக்கு இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை வகிப்பதற்கு செயற்பாட்டை நிறுத்த வேண்டும். இதனூடாகவே, வட, கிழக்கிலுள்ள கல்வித்துறையில் இராணுவ தலையீட்டை நிறுத்த முடியும். இதனால், ஏற்கனவே, இருந்த பெயருடன் இயங்குவதற்கு ஏதுவாக, சிவில் பாதுகாப்புப் பிரிவினராம் கலாசிப்பாடுப்பட்டுள்ள பெயர்ப்பலகையை அகற்றுவதற்கும் இராணுவப் பெயர்கள் சூட்டும் செயற்பாட்டையும் தடுத்தும் நிறுத்தமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை, தூக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி தொடக்கம் இலங்கைக்கு கடன் உதவிகள் வழங்கும் அனைத்து நிறுவனங்களும் இங்கு நடக்கும் அதியாயங்கள், இராணுவ கெடுபிடிகளை முதலில் கவனத்திற்கு கொண்டு சிந்திக்க வேண்டும்.

இது குறித்து வடக்கு ஆளுநருக்கு அறிவித்தேன். எனினும் அவருக்கு தமிழ் தெரியாது. அருக்கு நிர்வாகம் நிர்வாகம் செய்ய முடியும். அவரால் என்னுடைய கடிதத்திற்கு பதில் கொடுக்க முடியவில்லை. எனவே, ஜனாதிபதியின் உரை தேர்மையானதாக இருந்தால், அவர் செய்யும் காரியமும் தேர்மையாக இருக்க வேண்டும். இராணுவத்தின் பலவந்தத்திலிருந்து அப்பகுதி மக்களை பாதுகாக்க வேண்டும் – என்றார்.

நிதி...

ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இது பற்றி கலந்துரையாடப்படுகிறது.

இப்போது உங்கள் கடமையை செய்யுங்கள். நாடாளுமன்றத்தில் உள்ள 225 லட்சம் பிள்ளைகளும் தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும். பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் இன்னை நாடாளுமன்றத்தில் தினையுட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த அர்ப்பணிப்பிலிருந்து நாம் பயனடைய விரும்பினால், அனைவரும் ஒன்றினைந்து நாடாளுமன்றத்தை மீண்டும் நாட்டின் நலனுக்காக செயல்படுத்த வேண்டும்.

நாட்டுக்காக, நாடாளுமன்றத்துக்காக, அரசாங் கத்துக்காக நன்றி தெரிவிக்கிறேன். இந்த நடவடிக்கையை எடுத்தமைக்காக, இப்போது எமக்கு நாட்டில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியும். வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அடுத்த ஆண்டுக்குள் நாட்டில் எரிபொருள் மையை ஏற்படுத்த வேண்டுமாளால், அது நாடா ளுமன்றத்தில் செய்யப்பட வேண்டும். அதைப் பாதுகாக்க எழுத்தித்தருகிறீர்கள். நாடாளுமன்றம் செயல்பட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஜனநாயகத்தை பாதுகாக்கும் உள்ளை இடமான நாடாளுமன்ற வளாகத்துக்குள் வன்முறையாளர்கள் பிரவேசிப்பதை வெற்றிகரமாக தடுத்த பாதுகாப்புப்படை வீரர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கமசிங்க, பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

அக்குரெகொடவில் அமைந்துள்ள இராணுவ தலைமையகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) விஜயம் மேற்கொண்டார். இராணுவத் தபதபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர். இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் கலந்துகொண்டிருந்தார்.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு தமிழர்களுக்கு அவசியம்

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் 100 நாள் செயல் முனைவு மன்னாரில் ஆரம்பம்

(மன்னார் நகர் செய்தியாளர்)

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் எனும் தொனிப்பொருளில் வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் நூறு நாட்கள் நடைபெறவுள்ள செயற்றிட்டத்தின் 9ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (09) காலை 10 மணியளவில் மன்னார் தோட்டவெளி பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் பாதிக்கப்பட்ட குடும்ப பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நூறு நாட்கள் நடைபெறவுள்ள செயற்றிட்டத்தின் 9ஆவது நாள் போராட்டம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெமிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்ப பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

குறித்த செயற்றிட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களால் 100 நாள் செயற்றிட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது

குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கமென்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். 13ஆவது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் சிறுபான்மை தமிழ் மக்களான நாம் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகளின் இனவாதக் கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வந்துள்ளோம். அது இன்றுவரை தொடர்கிறது.

இதுவே தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பரவலாக்கம் குறித்து சிந்திக்கத் தூண்டியது. இதன் நியாயத்தன்மையை பிராந்திய நட்பு நாடான இந்தியாவும் சர்வதேச நாடுகளும் என்றோ ஏற்றுக்கொண்டுள்ளன.

அதன் விளைவே இந்தியா, இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் சார்ந்து இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் (1987இன் இந்திய - இலங்கை உடன்படிக்கை), 1999 – 2008 வரையான காலப்பகுதியில் நோர்வேயின் மத்தியத்துவம் மற்றும் 2002இல் இலங்கையில் சமாதானம், புனர்வாழ்வு மற்றும் மீளக் கட்டுமானம் சார்ந்து பங்களிப்பு செய்வதற்கு ஜப்பானின் அமைச்சரவை யகுசி அசாயியை நியமித்தமை ஆகியன குறிப்பிடத்தக்கவாறும்.

1987இன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்குவந்த அரசுகள் எதுவுமே அதிகாரப் பரவலாக்கத்தை நிராகரிக்கவில்லை. விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் அதிகாரப்பரவலாக்க உரையாடலை மேற்கொள்ளவேண்டிய நிலை காணப்பட்டது.

1987இல் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகாரப்பரவலாக்கத்துக்கான 13ஆவது திருத்தச்சட்டத்தை அரசியலமைப்பில் இணைத்தார்.

1990இல் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அரசியல் தீர்வுகளுக்கான திட்டங்களை முன்வைத்தார். இவரின் காலத்தில், 1991இல், மங்கள முனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

1994 திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாயிருந்த காலத்தில், 1995இல் நீலன் திருச்செல்வம் மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் "ஒருங் கிணைந்த வடக்கு - கிழக்கு" அடங்கலான தீர்வுப் பொதி தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2001இல் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராகக்கொண்ட அரசாங்கம் நோர்வே மத்தியஸ்துவத்துடன் சமாட்சி (பெடரல்) முறையில் அதிகாரப் பரவலாக்கத்துக்கு இணங்கியது நினைவு கூரத்தக்கது.

2015இல் ஆட்சிக்கு வந்த விக்கிரமசிங்க – சிறிசேன "நல்லாட்சி" அரசு, ஐ.நா. மனித உரிமைப் பேரவையால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் இணைப்பங்காளியாக இருந்தது.

இத்தீர்மானத்தின் செயற்பாட்டு உறுப்புரை 16ஆனது, அரசியல் தீர்வை, அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வலியுறுத்துகிறது.

அவ்வகையில், வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினால் ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும்.

ஆகவே, எமக்கான உரிமைய நடைமுறைப் படுத்தவேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும், நட்பு நாடான இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்திக்கொண்டு வடக்கு, கிழக்கு வாழ் மக்களான நாம், எமது சாத்வீகமான, ஜனநாயகமான நூறு நாட்கள் செயல்முனைவை ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கிறோம். வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" - என குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முல்லேரியா பிரதேச சபை உறுப்பினர் கொலை:

சந்தேக நபர் ஆயுதக் களஞ்சியத்தை காட்ட சென்றபோது கல்குவாரியில் விழுந்து உயிரிழப்பு

பாதாள உலகக் குழுத் தலைவரான அங்கொட லொக்காவின் நெருங்கிய உறவினரும், கடவத்தை, பைன்வில பிரதேசத்தைச் சேர்ந்தவருமான சந்தேகநபர் ஒருவர் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதக் களஞ்சியத்தைக் காட்டச் சென்றபோது கல்குவாரியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். .

முல்லேரியா பிரதேச சபையின் பொதுஜன பெரமுன உறுப்பினரை சுட்டுக்கொன்ற சந்தேகநபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது கடுவலை, வைக்கிவத்தை பகுதியில் ஆயுதங்கள் ஒருதொகை மறைத்துவைக்கப்பட்டுள்ளதாக சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபரை பொலிஸார் அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரிடமிருந்து சந்தேகநபர் தப்பிச் செல்ல முற்பட்டபோது சந்தேகநபர் கற்குவாரியில் விழுந்து பலத்த காயமடைந்து அத்துகிரி ஒருல மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சந்தேக நபர் தப்பிச் செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவரும் அத்துருகிரி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மீது 13 பாரிய குற்றச்சாட்டுகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடவத்தைக்கு மேல் உள்ள பியான்வில பகுதியைச் சேர்ந்த துவான் சிராஜ் ஹர்ஹர் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு திங்கட்கிழமை (8) சென்று நிலைமையை நேரில் கண்டறிந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அங்குள்ள பள்ளிவாசல்களில் நிர்வாகிகளுடனும், பொதுமக்களுடனும் கலந்துரையாடினார். பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கும் சென்று நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார். இதன்போது மாவட்டத்தின் சக நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான வேலுகுமாரும் உடனிருந்தார்.

அகில இலங்கை ஹய்யத்துல் குர்ஆன் கற்கை நிலையத்தின் 11ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் தெஹிளை ஜும்ஆ பள்ளிவாசலில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி உள்ளிட்ட உலமாக்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடைபெற்றது. (பீ.எம்.முக்தார்)

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

09.08.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	136 5661	148 6328
கனேடியன் டொலர்	164 80 3	177 8 88
சீன யுவான் (ரென்மின்பி)	40 837	44 0660
யூரோ	251 1703	266 2075
ஜப்பான் யென்	1 5233	1 6343
சிங்கப்பூர் டொலர்	146 3164	157 480
ஸ்ரேலிங் பவுன்	318 0416	335 8613
சுவிஸ் பிரான்ங்	260 3 32	278 362
ஐ.அ.டொலர்	246 1884	257 5016

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	846 2513
குவைட்	குவைட் தினார்	0,065 74 2
ஓமான்	ஓமான் றியால்	826 3832
கட்டார்	கட்டார் றியால்	87 08 8
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	85 181
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	87 1547

கொவிட் தொற்று காரணமாக வவுனியாவில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் மீண்டும் கொவிட் தொற்று காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மூச்சுத்திணறல் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பிசீஆர் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கொவிட் தொற்று காரணமாக குறித்த குடும்பஸ்தர் நேற்று மரணமடைந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்தவர் செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபர் என சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

சீனக் கப்பலான 'யுவாங் வாங் 5' சர்ச்சை தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் (8) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனக் கப்பலுக்கு 2022 ஒக்ஸ்ட் 11-17 திகதிகளில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பல் நோக்கங்களுக்கான அனுமதி, அமைச்சினால் 12 ஜூலை 2022 அன்று கொழும்பிலுள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேலதிக ஆலோசனைகள் தேவைப்படுவதால், குறித்த கப்பலை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு செல்வதை ஒத்திவைக்குமாறு, அமைச்சு கொழும்பிலுள்ள சீன மக்கள் குடியரசின் தூதரகத்திற்கு தகவல் அனுப்பியுள்ளது.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான நீடித்த நட்புறவையும், சிறந்த உறவுகளையும் உறுதியான அடித்தளத்தில் நிலைநிறுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சு விரும்புகிறது என அண்மையில் கம்போடியாவின் போனம் பென் நகரில் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பின் போது இரண்டு வெளிவிவகார அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் வாங் மீ ஆகியோரால் வலியுறுத்தப்பட்டது.

இரு வெளியுறவு அமைச்சர்களுக்குமிடையிலான இந்த முதல் சந்திப்பில், நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் நிலையான கோட்பாடாக இருக்கும் ஒரே சீனா கொள்கைக்கான இலங்கையின் உறுதியான உறுதிப்பாட்டை அமைச்சர் சப்ரி குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் உளவுக் கப்பல் 'யுவான் வாங் 5' இலங்கைக்கு வருவதை இந்தியா உள்ளிட்பாகக் கண்காணித்து வருகிறது. இது என்ன கப்பல்? அது ஏன் இலங்கைக்கு செல்கிறது? இந்தியா ஏன் கவலைப்படுகிறது? என்ற கேள்விகள் எல்லோருடைய மனதிலும் எழுகின்றன.

இலங்கைக்கு வரவிருந்த சீன 'உளவுக் கப்பல்' ஒக்ஸ்ட் 11 ஆம் திகதி முதல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிறுத்தப்படவிருந்தது. இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில், இலங்கை துறைமுகத்திற்கு சீன உளவுக் கப்பல் வருவது மேலும் பல புதிய நெருக்கடிகளை நேரிலுவித்திருக்கிறது.

பீஜிங் கடன் அளித்தலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உத்தி, முக்கியத்துவம் வாய்ந்த ஆழ்கடல் துறைமுகமான அம்பாந்தோட்டையை நோக்கி, சீன ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பலான 'யுவான் வாங் 5' வர ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னணியில் முக்கிய காரணங்கள் இருக்கக் கூடும்.

'யுவான் வாங்' வகை கப்பல்கள் செயற்கைக்கோள், ரொக்கெட் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) ஏவுதல்களைக் கண்காணிக்கப் பயன்படுகிறது. பசிபிக், அட்லாண்டிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்கள் முழுவதும் இயங்கும் திறன் கொண்ட சமார் 7 கண்காணிப்பு கப்பல்கள் சீனாவிடம் உள்ளன.

பெய்ஜிங்கின் நிலம் சார்ந்த கண்காணிப்பு நிலையங்களுக்கு இந்த கப்பல்கள் துணைபுரிகின்றன.

அமெரிக்கத் பாதுகாப்புத்துறை அறிக்கையின்படி, இந்த விண்வெளி ஆதரவுக் கப்பல்கள் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் (பி.எல்.ஏ.) கேந்திர

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விநோரோம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

புதன்கிழமை, ஒகஸ்ட் 10, 2022

சீனக்கப்பலால் வந்த நெருக்கடி நிலைமை!

ஆதரவுப் படை (எஸ்.எஸ்.எஃப்.) மூலம் இயக்கப்படுகிறது. இது "பி.எல்.ஏவின் கேந்திர இடம், சைபர், மின்னணு, தகவல், தகவல் தொடர்பு, உளவியல் போர் பணிகள் மற்றும் திறன்கள்" ஆகியவற்றை மையப்படுத்துவதற்காக நிறுவப்பட்ட அரங்க கட்டளை நிலை அமைப்பாகும்.

'யுவான் வாங் 5' சீனாவின் ஜியாங்னான் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இது செப்டெம்பர் 2007 இல் கடற்படை சேவையில் சேர்ந்தது. 222 மீற்றர் நீளமும் 25.2 மீற்றர் அகலமும் கொண்ட இந்த கப்பலில் கடல்கடந்த வான்வெளி கண்காணிப்புக்கான அதிநவீன கண்காணிப்பு தொழில்நுட்பம் உள்ளது.

சீனாவின் 'லோங் மார்ச் 5 பி' ரொக்கெட்டை ஏவுவதுதான் அதன் கடைசி கண்காணிப்பு பணி. இது உலகத்தில் சீனாவின் டியாங்காங் விண்வெளி நிலையத்தின் முதல் ஆய்வகத் தொகுதி ஏவுதலின் கடல் கண்காணிப்பிலும் ஈடுபட்டது.

'யுவான் வாங் 5' ஒக்ஸ்ட் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் ஒரு வாரத்திற்கு நுழையவும், சரக்குகள் நிரப்பப்பட்ட பின்னர் ஒக்ஸ்ட் 17 ஆம் திகதி புறப்படவும் ஏற்பாடாகி இருந்தாலும் இராணுவக்கப்பல் வெறுமனே வந்துவிட்டுபோகுமா என்ற ஐயம் எழுந்திருக்கிறது.

"யுவான் வாங் 5 கப்பல் ஒக்ஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வடமேற்கு பகுதியில் சீனாவின் செயற்கைக்கோள்களின் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பை நடத்தும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டதை நினைவில் கொள்ளவேண்டியுள்ளது.

'யுவான் வாங் 5' கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருவது இலங்கை மற்றும் பிராந்திய வளரும் நாடுகளுக்கு அவர்களின் சொந்த விண்வெளித் திட்டங்களை கற்றுக்கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும் ஒரு சிறந்த வாய்ப்பை இருக்கும்" என்று சீன தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் அது நியாயமான காரணமாகத் தெரியவில்லை.

'யுவான் வாங் 5' ஒரு சக்திவாய்ந்த கண்காணிப்பு கப்பலாகும். சமார் 750 கி.மீ. – அதாவது கேரள, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பல துறைமுகங்கள் சீனாவின் ரேடாரில் இருக்கக்கூடும். தென்னிந்தியாவில் உள்ள பல முக்கிய நிலைகளை உளவு பார்க்கப்படும் அபாயத்தில் இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இலங்கையின் இரண்டாவது பெரிய துறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுகம் தென்கிழக்கு ஆசியாவை, ஆபிரிக்க மற்றும் மேற்கு ஆசியாவுடன் இணைக்கும் பாதையில் அமைந்துள்ளது. சீனாவைப் பொறுத்தவரை, அதன் பட்டுப்பாதை முயற்சியில் இது ஒரு முக்கியமான மைல் கல்லாகும். அதன் வளர்ச்சிக்கு பெரும்பாலும் சீனா நிதியுதவி அளித்தது. மேலும், பெருகிவரும் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், 2017 இல், கொழும்பு தனது பெரும்பான்மையான பங்குகளை சீன நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

இந்தத் துறைமுகத்தின் மீதான சீனக் கட்டுப்பாடு, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படை மையமான மாறுவதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் தங்கள் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று இந்தியாவும், அமெரிக்காவும் பலமுறை கவலை தெரிவித்துள்ளன. இந்தியாவிலுள்ள பாதுகாப்பு வல்லுநர்கள் அதன் பெருகாதார நம்பகத்தன்மையை அடிக்கடி கேள்வி எழுப்பியுள்ளனர். அதே சமயம், நிலம் மற்றும் கடல்வழித் தடம் அதிகரிப்பதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவைச் சுற்றி வளைக்கும் சீனாவின் 'முத்துச்சரம்' உத்திக்கு இது சரியாகப் பொருந்துகிறது என்று பாதுகாப்பு நிபுணர்கள் கட்டிக்காட்டுகின்றனர்.

அம்பாந்தோட்டை துறைமுகம் இந்தியாவிற்கு அருகாமையில் இருப்பது, சீன கடற்படை நீண்ட காலமாக இந்தியாவை இலக்காகக் கொண்ட கடல்சார் நெகிழ்வை அனுமதிக்கும் திறனைக் கொண்டுள்ளது. அதனை பெரிதும் ஆபத்தாக கருதும் இந்திய அதன் காரணமாகவே சீனாவின் கப்பல் வருவது தொடர்பில் கவலை கொண்டுள்ளது.

சீனாவின் கப்பல் இந்தியாவுக்கு ஆபத்தென சுவி அது இலங்கைக்கு வரக்கூடாதென்று புதுpart இவிலிக்குமானால், அதன்பின்னர் கப்பல் வருகையை தடுத்துநிறுத்துவது இலங்கைக்கும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தும். அதனால் இப்படியான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும்போது அது இராஜதந்திர உறவுகளை பாதிக்காதவகையில் எடுப்பதே சிறந்தது.

"ரஜர் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்று இலங்கை இதைச் சொன்னாலும், இந்தியா அல்லது சீனா இலங்கையுடன் கோபிக்கும் நிலைமையே இருக்கிறது. இதில் யாரை ஆதரித்தாலும், யாரை ஒதுக்கினாலும் இறுதியில் சேதாரம் இலங்கைக்குத்தான்.



அழிப்பதற்கன்று நிவியல்!

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் 1945 ஒகஸ்ட் 6, 9 தேதிகளில் ஜப்பான் நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகியின் மீது முதல் முதலாக அணுகுண்டுகள் வீசப்பட்டன. அதனால் விளைந்த அழிவுகள் கற்பனைகளுக்கு அப்பாற்பட்டவை.

வினாடி நேரத்திற்குள் அங்கே ஒரு பிரளயம் ஏற்பட்டது. மின்னல் மின்னியது. ஆயிரம் சூரியன்கள் ஒன்றாக வெடித்துச் சிதறியது போல நீல வெளிச்சம் ஒன்று ஏறிப் பாய்ந்தது. கண்கொண்டு பார்க்க முடியாத மின்னலின் பெருக்கு. அரை நொடியில் அங்கே அதிபயங்கரமான வெப்பம் ஏற்பட்டது.

குண்டு வெடிப்பு நடந்த மையத்திற்குச் சற்றுக் கீழே வெப்பநிலை 3000 பாகை சென்டிகிரேட் முதல் 4000 பாகை சென்டிகிரேட் வரை அதிகரித்தது. வெடித்த இடத்திற்குச் சுற்றிலும் உள்ள ஒன்றரை கிலோமீற்றர் சுற்றளவுப் பகுதியில் வெப்ப நிலை 540 பாகை சென்டிகிரேட்டுக்கும் அதிகமானது.

அளவற்ற சக்தி கொண்ட அழிவு தான்டவமாடும் அந்த நரகச் சூறாவளியில் ஆட்பட்டவர்கள் அந்த வினாடியே ஆவியாகிப் போனார்கள். நின்ற நிலையிலேயே இல்லாமல் போனார்கள். புகையும், துஸமாக மாறினார்கள். இருந்த இருப்பிலேயே ஒரு துண்டுக் கரியானார்கள். மனிதர்களும், விலங்குகளும், மரம், செடி கொடிகளும் நொடிப்பொழுதில் அந்த படுபயங்கர வெப்பத்தில் பொசுங்கிப் போனமை துயரமே.

அந்த அணு வெடிப்பில் ஆட்பட்டு அரை வினாடியில் கரைந்து காணாமல் போனவர்கள் அதிர்ஷ்டசாலிகள் எனலாம். அவர்கள் சாகாமல் வாழ்ந்து மரண வேதனையை ஒவ்வொரு வினாடியும் அனுபவிக்க வேண்டியதில்லை. வெடித்த அந்த வெப்ப மையத்திலிருந்து சற்று விலகி இருந்தவர்களுக்கு நரகவேதனையை அனுபவிப்பதுதான் வாழ்க்கையானது.

குண்டு வெடிக்கும் ஓசை கேட்டு ஓடி வந்து வேடிக்கை பார்த்தவர்களுடைய கண்களின் கருவிழிகள் உருகிவிட்டன. பாய்ந்து சென்ற வெப்பத்தின் கொடூரம் அப்படியிருந்தது. சற்றிலும் பரவிய சூட்டால், ஒன்றரை கிலோ மீற்றருக்கு அப்பால் நின்றிருந்தவர்களின் முகங்கள் கருகிக் கோரமாயின.

கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு 'பிசாசு' தாக்கியதைப் போல் அவர்கள் துடித்தார்கள். அவர்களின் உணர்ச்சியில் பாதி அழிந்தது. மரத்துப்போன நிலையில் சிறிது நேரம் இருந்தார்கள். பிறகு எழுந்து இயந்திர மனிதர்கள் நடப்பதைப் போல அவர்கள் ஆடியாடி நடந்தார்கள். தாகத்தால் தவித்தார்கள்.

முன்னேறிய தீக்கு நதிகள் தடையாக இருக்கவில்லை. பெருந்தீ காற்றோடு சேர்ந்து நதிகளின் மேலாகத் தாவி அக்கரையை அடைந்தது. மேலும் மேலும் முன்னேறிச் சென்றது. குண்டு விழுந்து வெடித்த மையத்திற்கு கீழே ஏற்பட்டதை விட அதிகமான நெருப்பு வெளியே இருந்தது. எரிக்கக் கூடியதையெல்லாம் எரித்துவிட்டு தீ முன்னேறியது.

'அணுகுண்டு' என்றால் என்னவென்று அதுவரை உலகிலுள்ள மனிதர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அந்த குண்டு வெடிப்பு, தீயாக மட்டுமே இல்லை. அது வெளியே துப்பிய கதிர்வீசுகளும், மனித உடல்களில் பலவிதமான நோய்களை ஏற்படுத்தத் தொடங்கின. அதன் விளைவுகளை அறிவதற்கு அவர்கள் சிறிது நாட்கள் காத்திருக்க வேண்டி வந்தது.

அந்தக் கொடுமையான நோய்கள் விளைத்த வேதனைகள் இன்னும் ஹிரோஷிமாவில் தொடர்கின்றன. இன்னும் பல தலைமுறைகளைக் கடந்தும் இது தொடரலாம் என்று அறிவியல் ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். போரின் அழிவு என்பது இப்படித்தான் இருக்கும் என்பதை அந்த நிகழ்வு அறிவுறுத்திக் கொண்டேயிருக்கும்.

இவ்வளவு அழிவுகளை உருவாக்கிய அந்த அணுகுண்டின் பெயர் 'லிட்டில் போய்'. அந்தச் சின்னப் பையனுக்கு மூன்று மீற்றர் நீளமும், 4,400 கிலோ கிராம் எடையும் இருந்தது. 1945 ஒகஸ்ட் முதல் நாள் ஹிரோஷிமாவில் புயல் காற்று வீசியது. பருவநிலை மோசமாக இருந்தது. அதனால்தான் அணுகுண்டு தாக்குதலை ஒகஸ்ட் 6ஆம் திகதிக்கு மாற்றி வைத்தார்கள்.

"நிபந்தனையற்ற சரணடைந்து விடுங்கள். இல்லையென்றால் முற்றிலும் அழிந்து போய் விடுவீர்கள்" என்று ஜப்பானிடம் அமெரிக்காவும், இங்கிலாந்தும், சீனாவும் கேட்டிருந்தன. அந்த அறிக்கை ஜூலை 26ஆம் நாள் வெளிவந்தது. ஜப்பான் அதை நிராகரித்து விட்டது. ஜப்பான் அடிபணிய மறுத்ததால் அணுகுண்டு வீசும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இரண்டாவது அணுகுண்டின் செல்லப் பெயர் 'குண்டு மனிதன்' என்பதாகும். இதன் நீளம் 3.5 மீற்றர், எடை 4,500 கிலோ கிராம். ஒகஸ்ட் 9 அன்று நாகசாகியில் வீசப்பட்டது. ஹிரோஷிமாவில் நடந்ததே நாகசாகியிலும் நடந்தது.

அதே மின்னல், பெருந்தீ, கடுமையான வெப்பத்தின் பாய்ச்சல், வெடிப்பு ஏற்படுத்திய புயல் காற்று, மரணம், பெரும் அவலம், பேரழிவு இவற்றோடு கதிர்வீச்சால் ஏற்பட்ட நோய்களும்.

ஹிரோஷிமாவில் குண்டு வெடித்த நாளில் ஒரு இலட்சம் பேர் இறந்தார்கள். ஓர் ஆண்டுக்குள் மாண்டவர்களின் எண்ணிக்கை 1,40,000 ஆக உயர்ந்தது. நாகசாகியில் குண்டு வெடித்த உடனே 74,000 பேர் இறந்தார்கள். அங்கே இருந்த தேவாலயத்தின் உயரமான கோபுரம் தெறித்து கீழேயுள்ள நதியில் விழுந்தது. குண்டு வெடிப்பின் சக்தி அவ்வளவு தீவிரமாக இருந்தது என்று குறிப்பிடுகின்றனர்.

போர் முடிவடையும் நேரத்தில் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்க வேண்டியதில்லை என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அமெரிக்க ஜனாதிபதி ஹெரி ட்ரூமனும், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் அணுகுண்டைப் பார்த்தனர். ஜூலை 16ஆம் நாளே அமெரிக்க நியூமெக்சிக்கோ பாலைவனத்தில் வெற்றிகரமாக அணுகுண்டு வெடித்து பரிசோதிக்கப்பட்டது. அதுவரை உலகம் கண்டிராத பயங்கர சக்தியைத் திறந்துவிட்டு ஜப்பானைத் திகைக்கச் செய்ய வேண்டும் என்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது.

அண்டத்தை ஆக்கவும், அழிக்கவும் வல்ல ஆற்றல் ஒவ்வொரு அணுவிலும் அடங்கியிருக்கிறது என்பதை அறிவியலாளர்கள் உணர்ந்து அதனைப் பல வழிகளிலும் பயன்படுத்த முயல்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் ஐன்ஸ்டீனின் ஆராய்ச்சியே முன்னோடியாக இருந்திருக்கிறது. அணுகுண்டு தயாரிப்பதற்கும் கூட, ஐன்ஸ்டீனின் சார்புக் கொள்கைளே அடிப்படையாக உதவின.

ஆனால், ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய அணுவின் சக்தியை அழிவு வேலைகளுக்கு மனிதன் பயன்படுத்துவதைக் கண்டு ஐன்ஸ்டீன் மிகவும் வருந்தினார். ஏனெனில், அவர் போரை அடியோடு வெறுத்தார். உலக அமைதி இயக்கத்தில் பெரும் பங்குகொண்டு என்றென்றும் சமாதானப் பிரியராகவே விளங்கினார்.

ஐன்ஸ்டீன் - ரஸ்ஸல் கூட்டறிக்கை ஒன்றில் அணு ஆயுதங்கள் பற்றியும், பனிப்போர் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். "நீங்கள் மனிதத்தன்மை ஒன்றை மட்டும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். மற்றதையெல்லாம் மறந்து விடுங்கள்" என்று அவர்கள் கூறியுள்ளனர். ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட அழிவை அறிந்த ஐன்ஸ்டீன் மிகவும் வருந்தினார்.

ஹிரோஷிமாவுக்குப் பிறகு நாகசாகியும் அணுகுண்டின் கோரப்சிக்கு இரையானது.

என்றாலும் கூட, ஜப்பான் இராணுவத் தலைவர்கள் கீழ்ப்படிய மறுத்தனர். ஜப்பானின் சக்கரவர்த்தி ஹிரோ ஹிதோ தலையிட்டு நிபந்தனையின்றிக் கீழ்ப்படிவது என்னும் முடிவை அவர்களின் மீது திணிக்க வேண்டி வந்தது.

சில இராணுவ அதிகாரிகள் அதற்கு எதிராகவும் செயல்பட்டனர். அடிபணிவதற்கான முடிவின் பதிவை கைப்பற்றவும் அவர்கள் முயன்றார்கள். எனினும், அவர்கள் அதில் வெற்றி பெறவில்லை. தம் மக்களின் துன்பத்தைக் கண்டு துயருற்ற சக்கரவர்த்தி அந்த முடிவை அறிவித்தார். ஜப்பான் நிபந்தனையின்றி அடி பணிகிறது என்ற அறிவிப்பு ஒகஸ்ட் 15 அன்று வெளிவந்தது.

இரண்டாவது உலகப் போரை யார் தொடங்கினர் என்றும், யார் மிகவும் கொடுமையாக நடந்து கொண்டனர் என்றும் விவாதங்கள் காலங்காலமாக நடந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஓர் உலகப் போர் வராமல் இருப்பதற்கு இந்த விவாதங்கள் பயன்படலாம். ஆனால், இழந்த மனிதர்களை உயிர்ப்பிக்க யாரால் முடியும்?

இவ்வளவுக்குப் பிறகும் உலகில் ஆங்காங்கு போர் நடந்து கொண்டுதான் இருக்கிறது. ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே தொடங்கிய போர் முடிவுக்கு வராமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ரஷ்யா ஒரு பக்கமும், உக்ரைன் பின்னால் நேட்டோ நாடுகளும் போரை நடத்திக் கொண்டே இருக்கின்றன. நாட்டு மக்கள் அகதிகளாகி அவதிப்படுகின்றனர். ஆயுத வணிகம் மும்முரமாக நடப்பது யாருக்கு இலாபம்?

இப்போது தாய்வானை மையமாக வைத்து சீனாவும், அமெரிக்காவும் போருக்கான ஒத்திகைகளை நடத்திக் கொண்டு இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சீனாவிடமிருந்து பிரிந்து சென்ற தாய்வான் தன்னை ஒரு சுதந்திர நாடாக அறிவித்திருக்கிறது. ஆனால், சீனாவோ தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று கூறி உரிமை கொண்டாடி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபை தலைவர் நான்சி பெலோசி தாய்வானுக்குச் செல்ல இருப்பதாக அண்மையில் அமெரிக்கா அறிவித்தது. இதற்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்த சீனா, தாய்வானுக்குச் சென்றால் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என எச்சரித்தது.

அந்த எச்சரிக்கையையும் மீறி அவர் தாய்வான் சென்றார். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங் வென்னுடனும், அரசு அதிகாரிகளுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதற்கு பதிலடியாக அந்தத் தீவைச் சுற்றிலும் குண்டுகள் வீசி சீன இராணுவம் போர்ப்பயிற்சி மேற்கொண்டது. தாய்வான் விவகாரங்களை கவனித்துக் கொள்ளும் சீன இராணுவத்தின் கிழக்கு மண்டல படைப் பிரிவு வீரர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர் என்று சீன செய்தி நிறுவனம் கூறியுள்ளது. இதனால் அமெரிக்க - சீன போர்ப்பதற்றம் தொடர்கிறது.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் போரின் அழிவு உறுதி செய்யப்பட்டது. இனி போரே கூடாது என்ற முடிவில் உலக அமைதிக்காகவே ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது. ஆனால், இப்போது அதன் நிலை என்ன? வல்லரசுகளின் கட்டுப்பாட்டில் அது வலிமையிழந்து நிற்கிறது. அதனை வாழ வைக்கவேண்டில் மனித இனத்துக்கு வாழ்வு ஏது?

உதயை மு.வீரையன்
நன்றி - தினமணி

நக்கல் நமசிவாயம்

9 ஆம் திகதி அரசாங்கத்துக்கு மக்கள் ஷொக் கொடுப்பாங்கள் எண்டு பார்த்தால் காரண்ட் கட்டணத்தை கூட்டி அரசாங்கம் மக்களுக்கு ஷொக் கொடுத்திருக்குது பாருங்கோ..!

இன்றைய நாளில்

★ 610 – முகம்மது நபி குர்ஆனை அளித்த நாள். இது இஸ்லாமில், "லைலத்துல் கத்ர்" அல்லது ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவு எனப்படுகிறது.
★ 654 – முதலாம் மார்டீனஸுக்குப் பின் முதலாம் இயூஜின் திருத்தந்தை ஆனார்.
★ 1519 – மகலனின் 5 கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவியா நகரிலிருந்து புறப்பட்டன.
★ 1741 – குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியின் படையினரைத் தோற்கடித்தார்.
★ 1792 – பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் 16ஆம் லூயி மன்னர் கைதுசெய்யப் பட்டார். அவரது பாதுகாப்புப் படையினர் பிரெஞ்சு தீவிரவாதக் கும்பலால் படுகொல செய்யப்பட்டனர்.
★ 1793 – இலுவா அருங்காட்சியகம் பிரான்ஸில் திறந்து வைக்கப்பட்டது.
★ 1802 – திருகோணமலையில் தடுப்புச் ஏற்றும் இயக்கம் ஆரம்பமானது.
★ 1821 – மிசூரி அமெரிக்காவின் 24ஆவது மாநிலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
★ 1932 – 5.1 கிலோ எடையுள்ள விண்வீழ்கல் ஒன்று 7 துண்டுகளாக வெடித்து அமெரிக்காவின் மிசூரி மாநிலத்தில் ஆர்சி என்ற நகருக்குள் வீழ்ந்தது.
★ 1948 – ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்தி பேரவையைத் தொடக்கி வைத்தார்.
★ 1990 – மகளன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
★ 2006 – திருகோணமலையில் சேருவிலை பகுதியில் இலங்கை இராணுவம் தொடர்ச்சியாக குண்டுகள் வீசியதில் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அமைச்சரவை முடிவுகள்

01. உயர்கல்வி புத்தாக்கத்திற்கான சர்வதேச நிலையம் (UNESCO – ICHEI மற்றும் இலங்கை அரசின் கல்வி அமைச்சுக்கும் இடையில் கல்வி ஒத்துழைப்புகள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்

யுனெஸ்கோ அமைப்பின் அனுசரணையின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உயர்கல்வி புத்தாக்கத்திற்கான சர்வதேச நிலையம் எமது நாட்டின் கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் பணியாளர்களின் இயலளவை அதிகரிப்பதற்காக இணையவழி ஊடாக பயிற்சிகளை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதன்கீழ் செயற்கையான நுண்ணறிவு (Artificial Intelligence), றொபோ தொழில்நுட்பம், தரவுப் பகுப்பாய்வு, இயந்திரான்கள், பொறியியல் கற்கைகள், டிஜிட்டல் வடிவமைப்பு மற்றும் டிஜிட்டல் வர்த்தகம் போன்ற துறைகளை அணுகுவதற்கான தளங்களை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இருதரப்பினர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. செலவு வரம்பின் அடிப்படையில் நீர்க் கட்டணத்தை அறிமுகப்படுத்தல்

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிதி நிலைபேற்றை உறுதிப்படுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாகவும் தடையின்றியும் நீர் வழங்கலை மேற்கொள்வதற்கு கட்டணங்களில் திருத்தம் கொண்டுவர வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மீன்டெழும் செலவுகள் மற்றும் மூலதனக் கடன் பொறுப்புகளை ஈடுசெய்வதற்கு இயலுமான வகையில் தற்போது அறவிடப்படும் நீர்க் கட்டணம் மற்றும் மலக்கழிவுகிறில் கட்டணங்களைத் திருத்தம் செய்வதற்கு நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

03. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பிராந்தியக் கைத்தொழில் பேட்டைகளில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான கரிசனைகள் ஒலுக்கி வழங்கல்

பிராந்திய மட்டத்தில் கைத்தொழிற்றுறையை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் அமைச்சின் மூலம் பிராந்திய கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய, குறித்த வேலைத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 25 முதலீட்டாளர்களுக்கு 13 கைத்தொழில் பேட்டைகளில் காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. பாடசாலை மட்டத்தில் ஜப்பான் மொழித் தேர்ச்சி வழங்கலை ஆரம்பித்தல்

இலங்கை அரசு மற்றும் ஜப்பான் அரசுக்கிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், தொழில்நுட்ப சேவைக்காலப் பயிலுநர்களாக, விசேட நியுனத்துவங்களுடன் கூடிய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 14துறைகளில் தொழிலுக்கு விண்ணப்பிப்பதற்காக இலங்கையர்களுக்கு இயலுமை உண்டு. அதற்கமை, ஜப்பான் மொழித் தேர்ச்சி கட்டாயமான தகைமையாக இருப்பதுடன், 1ல கட்டங்களாக நடத்தப்படும் பரீட்சைகள் மூலம் குறித்த தகைமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்துவரும் 05ஆண்டுகளில் விசேட நியுனத்துவ வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 345,000 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இலங்கை உள்ளிட்ட 07நாடுகளுடன் ஜப்பான் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. குறித்த விடயங்களைக் கருத்தில்கொண்டு, தற்போது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் தொழில்நுட்பவியல் பாடவிதானத்தின் கீழ் ஜப்பான் மொழி மற்றும் ஆங்கில மொழிக் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், ஜப்பான் வேலைவாய்ப்புகளை இலக்காகக்கொண்ட பராமரிப்புச் சேவைகள், விருந்தோம்பல் சேவைகள், கட்டிடங்கள் துய்மையாக்கல், விவசாய நடவடிக்கைகள், மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் அல்லது மின்னியல் மற்றும் இவ்விரனியல் தொழில்நுட்பத்துறைகளில் மென்திறன்களை விருத்தி செய்வதற்கும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானக் கம்பனிக்கான விமான சேவைகள் காப்புறுதிக் காப்பீட்டுக்கான ஒப்பந்தம் வழங்கல்

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் கம்பனி தனது விமானங்களுக்கு 04 வகையான காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் காப்புறுதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றது. குறித்த 04 காப்புறுதிக் காப்பீடுகளுக்காக காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள பொதுக் காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட தேசியப் போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த ஒப்பந்தத்தை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பலதுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிஅனுசரணை வழங்குகின்ற ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் E/H 1 மற்றும் E/H 2 கருத்திட்டங்களின் அடுத்த கட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதிஅனுசரணை வழங்குகின்ற ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் E/H 1 மற்றும் E/H 2 கருத்திட்டங்களின் கீழ் 6,250 சதுர கிலோமீற்றர் கிராமிய வீதிகளும், 750 சதுர கிலோமீற்றர் தேசிய வீதிகளும் அபிவிருத்தி செய்து, பராமரிப்பதற்காக 140 சிவில் வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 4,800 சதுர கிலோமீற்றர் கிராமிய வீதிகளும், 300 சதுர கிலோமீற்றர் தேசிய வீதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டங்களை தடையின்றி மேற்கொள்ளும் வகையில் E/H 1 கருத்திட்டத்தின் 5ஆம் கட்டத்திற்காக 243 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் E/H 2 கருத்திட்டத்தின் 4ஆம் கட்டத்திற்கான 200 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

07. வெளியிப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் விதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல், கலால் வரி (52ஆம் அத்தியாயம்)இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் உள்ளடங்கிய 02வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் 2003ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்களை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

08. இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளுக்காக மோட்டார் வாகனச் சட்டத்தை திருத்தம் செய்தல்

சுவட்டு எரிபொருட்களைப் பயன்படுத்தாமல் இலத்திரனியல் வலுவைப் பயன்படுத்தி இயங்குகின்ற வாகனப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இலத்திரனியல் மோட்டார் முச்சக்கர ஊர்திகளை இலங்கையில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குமாறு பல்வேறு தரப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனாலும், அதற்கான சட்ட ஏற்பாடுகள் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் காணப்படாமையால், குறித்த சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளை பதிவு செய்வதற்கு இயலுமைகிட்டும் வகையில் குறித்த சட்ட ஏற்பாடுகளை உள்வாங்கி மோட்டார் வாகன சட்டத்தை திருத்தம் செய்வதற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

09. 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை மற்றும் அலுவக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தை திருத்தம் செய்தல்

அறிவுச் செயன்முறையை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல் (Knowledge Process Outsourcing), வியாபாரச் செயன்முறையை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளல்(Business Process Outsourcing), வேறு நாடுகளில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களுக்கான கணக்கு, நிர்வாக மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அலுவலகங்கள் (Back office) மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட (ICT enabling services) வியாபார நிறுவனங்களின் இயல்புகளுக்கமைய குறித்த தொழில்களில் ஈடுபடும் ஊழியர்களுக்கு வேறு நாடுகளின் நேர அட்டவணைக்கமைய பணிபுரிவதற்கு நேரிடுகின்றது.

ஆனாலும், 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை மற்றும் அலுவக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் மாலை 6.00 மணிக்குப் பின்னர் பெண்களை மட்டுப்படுத்தப்பட்ட தொழில்களில் மாத்திரமே பணியில் அமர்த்தலாம். குறித்த நிலைமையின் கீழ் பெண்களை இரவு வேளைகளில் தொழிலில் அமர்த்துதல் தொடர்பாக தற்போது காணப்படும் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளைத் திருத்தம் செய்வதற்காக 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை மற்றும் அலுவக ஊழியர்கள் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தை திருத்தம் செய்வதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. அமைச்சரவை உப செயற்குழுக்களை நியமித்தல்

அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கு அதிக நேரத்தை ஒதுக்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் சட்டரீதியான மற்றும் ஏனைய ஏற்புடைய விடயங்களை ஆழமாக ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய விடயதானங்களுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பாக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு இயலுமாகும் வகையில் அமைச்சரவை உப செயற்குழுக்களை நிறுவுதல் பொருத்தமானதென கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, புதிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் பெறுகைக் கோரல் நடவடிக்கைகள் போன்ற அரச செலவுகள் தொடர்பான யோசனைகள் பற்றி கொள்கை ரீதியான பரிந்துரைகளை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையில் அரச செலவுகள் முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உப செயற்குழுவொன்றை நியமிப்பதற்காகவும், அரச சேவை நியமனங்கள், பதவியுயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற நிறுவன ரீதியான நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் பற்றி சமர்ப்பிக்கப்படும் யோசனைகளை ஆராய்ந்து அமைச்சரவைக்கு கொள்கை ரீதியான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதமர் தலைமையில் நிறுவன ரீதியான விவகாரங்கள் தொடர்பான அமைச்சரவை உப செயற்குழுவை நியமிப்பதற்காகவும் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

11. வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபசெயற்குழுவை நியமித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுவை அமைத்தல்

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நிலைமையில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பற்றாக்குறையின்றி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்தி வாழ்க்கைச் செலவை நியாயாப் பேணுவதற்கு அவசியமான கொள்கை ரீதியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை அமைச்சரவைக்குப் பரிந்துரைப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் வாழ்க்கைச் செலவு தொடர்பான உபசெயற்குழுவை நியமிப்பதற்கும், குறித்த உபசெயற்குழு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதற்காக சந்தை, வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் தலைமையின் கீழ் உணவுப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதற்கும் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்சி அவசர நிவாரண உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

வறுமைப்பட்டவர்கள் மற்றும் இடர்களுக்கு உள்ளாகியவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கும் நோக்கில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்சி அவசர நிவாரண உதவித்திட்டம் எனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்திற்குத் தேவையான நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியனுசரணையின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் சிலவற்றில் காணப்படும் மேலதிக நிதியை மீளாய்வின் மூலம் ஒதுக்கிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், கருத்திட்ட செயற்பாடுகளின் நிதியிடலுக்காக கூடீட்சமான மற்றும் ஆசிய பசுபிக் வலய துரிதமீட்சிக்கான ஜப்பான் நிதியத்தால் 03மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும், அதற்கமைய ஏற்புடைய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. திரவப் பற்றோலிய சமையல் எரிவாயுவுக்கான திருத்தப்பட்ட விலைசூத்திரத்தை நடைமுறைப்படுத்தல்

தொடர்ச்சியான சமையல் எரிவாயு விநியோகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் செலவு வரம்பின் அடிப்படையில் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவதற்கும், குறித்த விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 05ஆம் திகதி சமையல் எரிவாயு விலையைத் திருத்தம் செய்வதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

14. 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்

சமகாலத்தில் நாட்டில் நிலவுகின்ற மோசமான வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையால், தொடர்ச்சியாக பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக, பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிக்காக மேலும் போட்டித்தன்மையான தரப்பினர்களுக்கு அனுமதிப்பதிற்கங்களை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் குறித்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சட்டமூலத்திற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்களை கைதுசெய்யும் அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்?

(மன்னார் நகர் திருப்)

உறவுகளைத்தேடும் சங்கத்தின் தலைவி மனுவேல் உதயச்சந்திரா கேள்வி

'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்களை தேடித்தேடி கைதுசெய்யும் அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் மௌனம் காப்பது ஏன்? - என காணாமலாக்கப்பட்டோர் உறவுகளைத் தேடும் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவேல் உதயச்சந்திரா கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்து எதிர்வரும் 12ஆம் திகதியுடன் 2000 நாட்கள் நிறைவடைகின்றன.

இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம்(8) ஊடகங்களை சந்தித்தபோது மனுவேல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கும்போது,

எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் காணாமலாக்கப்பட்ட உறவுகள் போராட்டத்தில் குதித்து 2000 நாட்கள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு நாங்கள் இந்த 2000 நாட்கள் வீதிகளில் நின்று போராடி இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்றுகூறி சர்வதேச சமூகத்திடம் நீதி கோரியிருந்தோம். ஆனால், இதுவரைக்கும் சர்வதேசமும் எங்களுக்கு எந்தவொரு முடிவையும் சொல்லவில்லை.

எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடரில் என்றாலும் இலங்கை போர்க்குற்றம், இனப்படுகொலை, காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்று எங்களுக்கு ஒரு முடிவு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த 2000 நாட்கள் நிறைவு போராட்டம் கிளிநொச்சி மாவட்ட கந்தசுவாமி கோவிலில் காலை 9மணிக்கு ஆரம்பித்து டிப்போ வரையும் செல்ல உள்ளது. இந்தப் போராட்டத்தில் இன, மத பேதம்பாராமல் இளைஞர்கள், யுவதிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் இனத்தைச் சார்ந்த அனைவரும் வரந்துகொண்டு எமக்கு உறுதுணையாக நின்று எமது கோரிக்கை வெற்றிபெறச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

2000 நாட்கள் என்று சொன்னால் சாதாரணமாக கிடையாது. ஆறு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. அதில் 139 காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு உறவுகளும் மரணித்துக்கொண்டு போகும்போது எங்களிடம் உள்ள சாட்சிகளும் அவர்களோடு சேர்ந்து மரணித்துப் போகின்றன. அதேபோல் நாங்களும் மரணித்துப் போனால் எங்களுடைய சாட்சிகளும் இல்லாமல் போய்விடும். அதைத்தான் இந்த இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

அதனால்தான் நாங்கள் சர்வதேசத்திடம் நீதி கோரி வருகிறோம். சர்வதேசம் எங்களுடைய கண்ணீரையும் அவல நிலையையும் பார்த்து எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று நம்பிக்கையோடு இந்த ஊடகசந்திப்பு செய்கிறோம். அனைவரும் 12ஆம் திகதி காலை 9மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கந்தசுவாமி கோவிலடியில் ஒன்றுசேருமாறு உங்களை தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

மேலும், இந்த காலிமுகத்திடலில் உள்ள கோட்டா கோ கம போராட்டக்களத்தில் போராடிய இளைஞர் யுவதிகளை, ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு அங்கு அயன் பொக்ஸ் எடுத்தவர்களையும், அந்த நீச்சல் குளத்தில் குளிப்பவர்களையும், தொலைபேசிகள் பேசியவர்களையும், ஜனாதிபதி செயலகத்தில் உணவு உண்பவர்களையும் தேடித்தேடி, கைதுசெய்யும் இந்த அரசாங்கமும் பொலிஸாரும் ஏன் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை?

13 வருடங்களாக பொலிஸ் நிலையங்களுக்கு ஏறி இறங்கி காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக அறிவித்திருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அரசாங்கத்தின் கைக்கூலியாகவே இந்தப் பொலிஸாரும் நீதியை மறந்து செயல்படுகின்றார்கள். உண்மையில் கைதுசெய்யப்பட்ட பாதள சிறையில் அடைத்து வைத்திருந்தவர்களை உண்மைகள் வெளிவரப் போகின்றது என்று தற்போது கொலை செய்து போடுகின்றார்களோ தெரியவில்லை.

இலங்கை இராணுவமும், பொலிஸாரும் தற்போதைய ஆர்ப்பாட்டக்காரர்களைத் தேடித் தேடி பிடிப்பதைபோன்று அவர்கள் நினைத்திருந்தால் காணாமலாக்கப்பட்ட உறவுகளையும் தேடிக் கண்டுபிடித்து தந்திருக்கலாம் அவர்கள் நினைக்கவில்லை. எனவேதான் நாங்கள் சர்வதேசத்திடம் மீண்டும் மீண்டும் நீதியை கேட்டு நிற்கின்றோம் – என்றார்.

கொரோனா தொற்றுக்குள்ளான 6 பேருக்கு யாழ். போதனாவில் சிகிச்சை

(யாழ். நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான 06 பேர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர் - என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டொக்டர் சி.ய.முனாறநந்தா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த நபர்கள் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தடுப்புசியை ஒரு வருடத்துக்கு முன்னர் பெற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை சமாதான நீதவானாக தில்லைநாதன் நியமனம்

(நெல்லியடி திருப்)

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளரும் சமூக சேவையாளருமாகிய வல்விபுரநாதி தில்லைநாதன் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் இவர் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், நாகர் கோவில் தெற்கைச் சேர்ந்த அமரத்துவமடைந்த வல்லிபுரநாதர் - பதஞ்சலி தம்பதியின் மூத்த மகனும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார்.

வன்முறை - தீவிரவாதம் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் மன்னாரில்

(மன்னார் நகர் திருப்)

வன்முறை தீவிரவாதத்தை இல்லாதொழிப் பதற்காக இலங்கையிலுள்ள சிவில் சமூகமட்ட அமைப்புகளின் ஆற்றலை விருத்திசெய்யும் முகமாக தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் தொடர்பாடலுக்கான மையத்தின் ஏற்பாட்டில் அதன் திட்ட இணைப்பாளர் ஜசோதரன் தலைமையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மற்றும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளிமுனை, உப்புக்குளம் மற்றும் மன்னார் பிரதேச செயலக வளாகத்தில் குறித்த விழிப்புணர்வு வீதி நாடகம் காண்பிக்கப்பட்டது.

அரங்கேற்ற நாடகக்குழுவினரால் தயாரிக்கப்பட்ட நாடகமானது, மக்கள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளை வன்முறையாகவும் தனிநபர்களுக்கிடையில் ஏற்படும் சண்டைகளை குழு சண்டைகளாகவும் மாற்றுவதால் ஏற்படும் விபரீத விளைவுகளை மையப்படுத்தி அமைக்கப்பட்டிருந்தது.

குறித்த யெற்றிட்டத்தில் மன்னார் சர்வமதக் குழு உறுப்பினர்கள், சமூக யெற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நாடகத்தின் இறுதியில் பார்வையாளர்களாகிய பொதுமக்கள் வன்முறை தீவிரவாதத்திற்கோ குழு மோதல்களுக்கோ ஆதரவளிக்க மாட்டோம் என சத்தியப்பிரமாணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியாவில் அரசுக்கு சொந்தமான 14 ஏக்கர் காணி தனிநபரால் ஆக்கிரமிப்பு

அதனை விவசாயிகளுக்கு வழங்கவேண்டுமென விவசாயத் திணைக்கள உறுப்பினர்கள் கோரிக்கை

(செ.திவாகரன்)

நுவரெலியா மீப்பிலிமான பகுதியில் அரசுக்கு சொந்தமான 14ஏக்கர் காணி சட்டவிரோதமாக தனிநபர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள அப்பகுதி விவசாயிகள் குறித்த காணி அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலகொடவிடம் இதுதொடர்பில் நேற்றுமுன்தினம்(08) திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடிய விவசாயத் திணைக்கள உறுப்பினர்கள் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

நுவரெலியா மீப்பிலிமான பகுதி மக்கள் தமது வாழ்வாதார தொழிலாக விவசாயத்தினையே நம்பியிருக்கின்றனர். அதனால் அவர்களுக்கு இடையூறின்றி தமது தொழிலை முன்னெடுக்க சரியான இடங்கள் தேவைப்படுகின்றன. எனவே, குறித்த தனிநபர் காணியினை விட்டு வெளியேறுமாறு நுவரெலியா பிரதேச செயலாளர் ஊடாக எழுத்து மூலம் அறிவித்துள்ளபோதிலும் அந்த காணியினை வழங்காது பலவந்தமாக வைத்துகொண்டுள்ளார். இதேவேளை, இந்த நபர் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவையும் செலுத்துவதில்லை.

எமது விவசாயத் திணைக்களத்தில் 150 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

ஒரு வருடத்திற்காவது இந்தக் காணியினை எமது விவசாயத் திணைக்களத்திற்கு பெற்றுத்தருமாறு நாம் அரசாங்க அதிபரிடம் கோருகின்றோம். நாம் இந்தக் காணியினை உரிமை கோரவில்லை.

விவசாய அமைச்சின் ஊடாக இந்த காணியினை எமக்கு பெற்றுத் தாருங்கள். தமது வீட்டுத்தோட்டங்களில் விவசாய பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், இதுபோன்று தனிநபர் ஒருவர் அரசகாணியினை பலவந்தமாக வைத்திருப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இதற்கு அரசாங்க அதிபரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு விவசாயத் திணைக்கள உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளம் காரணமாக இடிந்து விழுந்துள்ள களுகஹவாடி பாலம்

சீரற்ற காலநிலை காரணமாக, பிபில - மெதமட பிரதேசயெலாளர் பிரிவிற்குட்பட்ட கொடபோவ கிராம சேவையாளர் பிரிவிலுள்ள களுகஹவாடி பாலம் இடிந்து விழுந்துள்ளமையினால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட குறித்த பாலத்தினூடாக அப்பிரதேச மக்கள் களுகஹவாடியிலிருந்து மறுபுறம் உள்ள களுகஹவாடிக்கு பயணித்து வந்துள்ளனர். இதற்கு முதல் குறித்த பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், புனரமைப்புப் பணியின்போது தரமான பொருட்களை பயன்படுத்தி இப்பாலம் கட்டப்படாமையால் அது உடைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தஹமல் ஓயாவின் மேல் நிர்மாணிக்கப் பட்டுள்ள களுகஹவாடி பாலம் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது. மழைக் காலங்களில் தஹமல ஓயாவிலிருந்து பாயும் நீர் இந்த பாலத்தின் வழியாக செல்கிறது. இது பலமுறை உடைந்தவுள்ளதுடன், இரண்டு முறை புனரமைக்கப்பட்டது.

அதற்கான பணத்தை உள்ளூராட்சி சபையால் செலவிட முடியவில்லை.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காவத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெரிய பாலத்தை அமைக்க திட்டமிட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்காததால், கட்டுமானப்பணி தாமதமாகியுள்ளது என மெதமட பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

20வயதான இளைஞனை காணவில்லை

(செ.திவாகரன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகலை பகுதியில் 20 வயது இளைஞன் ஒருவர் கடந்த 3ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுந்தரலிங்கம் சசிதரன் என்ற குறித்த இளைஞன் கடந்த 03ஆம் திகதி நுவரெலியா நகருக்கு பொருட்கள் வாங்குவதற்காக சென்றிருந்தவேளையில், குறித்த நாள் தொடக்கம் அவர் வீடு திரும்பவில்லையென அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞன் தொடர்பில் பெற்றோர் கடந்த 6ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே, இவரை கண்டவர்கள் 0763497788 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டியில் சித்திரக்கண்காட்சி

(கண்டி திருப்)

வரலாற்று புகழ்மிக்க கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் எசல பெரஹெராவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான சித்திரக்கண்காட்சி ஒன்று கண்டி குயீன்ஸ் ஹோட்டலில் நேற்று(09) இடம்பெற்றது.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களது வேண்டுகோளின்பேரில், ஸ்ரீதலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதிட தேவ இதனை ஒழுங்கு செய்திருந்ததுடன் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே திறந்துவைத்தார்.

இடர்காலத்தில் வாழ்வாதார உதவிதேவைப்படும் 50குடும்பங்களுக்கு நுவரெலியா பிரதேசத்திய மக்கள் வங்கியின் இந்துமா மன்றத்தின் அனுசரணையில் கொட்டகலை வீ ஆசிரியர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி கொட்டகலை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், வீ ஆசிரியர் ஒன்றியத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (தலவாக்கலை நிருப்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சவால்களை முறியடிப்பார்

செக் குடியரசின் ஜனாதிபதி வாழ்த்து

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க வேண்டும் என்று தாம் பிரார்த்திப்பதாக செக் குடியரசின் ஜனாதிபதி மைலோஸ் சீமன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள விக்ரமசிங்கவுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துள்ள செக் குடியரசின் ஜனாதிபதி, அனுபவமிக்க வெற்றிகரமாக முறியடிப்பார் எனவும் தலைவராக அவர் சவால்களை நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

செக் குடியரசும் இலங்கையும் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் நெருங்கிய நட்பை அனுபவித்து வருகின்றன. அந்த சிறப்பான நல்லுறவை இரு நாட்டு மக்களின் நலனுக்காக தொடர்ந்தும் ஆழமாக மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும் செக் குடியரசுத் தலைவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

போராட்டக்காரர்கள் மூவர் பொலிஸாரால் கைது; நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை

கட்டவிரோதமான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டமை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்குள் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை ஆகியவை தொடர்பில் மூவரை நேற்றுமுன்தினம் (08) கைதுசெய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த மே மாதம் 28ஆம் திகதி நீதிமன்ற தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை மற்றும் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக 32 வயதான நபர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொஸ்வத்தையச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கடந்த மே மாதம் 19ஆம் திகதி நீதிமன்ற உத்தரவை மீறி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்காக 31 வயதான நபர் கொழும்பு தெற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் வரலாட்டிய பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, கடந்த ஜூலை மாதம் 09ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்த அதன் சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டுக்காக கொழும்பு தெற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பம்பலப்பிட்டியவில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 03ஐச் சேர்ந்த 53வயதான நபர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வரவிருக்கும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் விசேட நடவடிக்கை

இலங்கையின் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள்(RPCs) தமது நிலங்களில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை அதிகரிக்க புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளன. அதேவேளை, உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு தமது ஊழியர்களுக்கு விசேட ஆதரவை வழங்கி வருகின்றன.

மொத்தத்தில், RPCகளுக்குச் சொந்தமான 21தோட்டங்கள் நேரடி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன அல்லது திணசரி நுகர்வுக்காக பயன்படுத்தப்படும் சிறுகியகால பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன. இந்த பயிர்கள் RPCக்கு சொந்தமான தோட்டங்களில் பணிபுரியும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்கள் மற்றும் RPCக்கு சொந்தமான தோட்டங்கள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன.

அரசாங்க நிறுவனங்களின் ஆதரவுடன், RPCகள் தங்கள் சொந்த செலவில் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளன, மேலும் பயிர்ச் செய்கைக்கு தேவையான விதைகள் மற்றும் தாவர உர வகைகள் போன்ற உள்ளீடுகளையும் வழங்கியுள்ளன. தோட்ட மனித அபிவிருத்தி அறக்கட்டளை (PHDT), விவசாயம் மற்றும் விவசாய சேவைகள் திணைக்களம் மற்றும் இத்திட்டத்தின் பயனாளிகளின் ஆதரவுடன் RPCகள் இதுவரை 578 மாதிரி தோட்டங்களையும் சுமார் 7,000 தோட்டங்களையும் நிறுவியுள்ளன.

இந்த பங்குடமையின் மூலம் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைச் சுற்றி 1000 மாதிரி தோட்டங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் மேலும் 20,000 தோட்டங்கள் RPC தோட்டங்களில் மேம்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டம் இனப்திற்காக அல்ல மேலும் பெருந்தோட்ட சமூகங்களுக்கான உணவு பாதுகாப்பை அதிகரிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறது. இது குறிப்பிட்ட RPC தொழிலாளர்கள் தங்கள் உபரி பயிர் விளைபொருட்களை மாளிய விலையில் விற்பதன் மூலம் கூடுதல் வருமானத்தை ஈட்ட உதவும்.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் இராஜதுரை, "இலங்கை தற்போது முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூன்று வேளை உணவு கூட கிடைக்காத கும்பங்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளது. RPC களாகிய நாங்கள் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினை மிகுந்த நிலையை உணர்ந்தோம். இந்தச் சூழலைப் எதிர்கொள்வதற்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது இந்த நேரத்தில் அனைத்து தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கடமை என்று நாங்கள் நம்புகிறோம்" என தெரிவித்தார்.

"தோட்டங்களில் உள்ள மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ள உதவுவதன் மூலம், வரவிருக்கும் உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் இந்த தேசிய முயற்சிக்கு எங்களால் இயன்றதைச் செய்வதை RPCகள் நோக்கமாகக் கொண்டுள்ளன. உணவு மற்றும் அத்தியாவசிய உரங்களுக்கான விநியோகத்தில் மற்றும் சந்தான உணவை வழங்குவதற்காக சமூக சமையலறைகளை அமைப்பதன் மூலம் உணவு விலைகளின் உச்ச அளவிலான அதிகரிப்பின் தாக்கத்திலிருந்து எங்கள் தொழிலாளர்களை பாதுகாக்க RPCகள் தொடர்சியான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன என இராஜதுரை மேலும் தெரிவித்தார்.

உணவு நெருக்கடியின் அச்சுறுத்தலுக்கு முன்னரே செயற்பட்டு, RPCகள் சில பயனாளி களுடன் இணைந்து தோட்டங்களைச் செய்ததோடு சில தோட்டங்களுக்கு நேரடியாக வும் பங்களித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் மரவள்ளிக்கிழங்கு, கிழங்கு, சோளம், உருளைக்கிழங்கு, வாழை, மிளகாய் மற்றும் கத்தரி, கறி மிளகாய், வெண்டைக்காய், பீட்ரூட் மற்றும் சேரட் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலைகள் பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள கடுமையான அதிகரிப்பின் தாக்கத்தை குறைப்பதற்கு இந்த சரியான நேரத்தில் இவ்வேலைத்திட்டம் உதவும். இலங்கை மத்திய வங்கியின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (NCPI) படி, இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஜூன் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 76வீதமாக அதிகரித்துள்ளது.

இந்த முயற்சிகளின் அடிப்படையில், PHDTஆனது RPCக்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் ஆதரவுடன் RPCs தோட்டங்களில் இயங்கும் சதொச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மூலம் மானிய விலையில் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை தோட்ட மக்களுக்கு வழங்கியுள்ளது. பணியாளர்கள் இந்த நிலையங்களில் கடனுக்கு பொருட்களை வாங்கி, ஊதியத்தைப் பெற்ற பிறகு திருப்பிச் செலுத்த முடியும்.

மேலும், சில RPC தோட்டங்களில் ஊழியர் களுக்கு மதிய உணவுத் திட்டமும் அறிமுகப்படுத் தப்படவுள்ளது.

தோட்ட மக்களின் குடும்ப உறுப்பினர்களின் சுகாதார நிலையை ஆராயவும், போஷாக்கு மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் அவர்களின் அறிவை மேம்படுத்தவும் PHDT நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

கொரோனா தொற்றுக்குள்ளாகி 3 பிள்ளைகளின் தந்தை மரணம்

(கெலும் குணதிலக்க)

கொரோனா தொற்றுக்குள்ளாகி மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒக்கம்பிட்டிய, குருமடயாயவைச் சேர்ந்த எச்.எம். சுமனதார என்ற 73 வயதான நபரே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் விசேட நிபுணர் தனபால ரத்நாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் உடலம் கொரோனா கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய மொனராகலை மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது.

14 மடிக்கணனிகளுடன் சந்தேக நபர் கைது

நாரஹேன்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையத் துக்குள் புகுந்து ஒரு கோடியே 34இலட்சத்து 19ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிய சந்தேகநபர் ஒருவரை 14 மடிக்கணினி களுடன் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து, இற்நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 01 ஐபோட், 03அப்பிள் தொலைபேசிகள், 03 றவீன கைக்கடிகாரங்கள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன. வெலிகமவைச் சேர்ந்த 37 வயதான சந்தேகநபரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கஹடோவிட்டவில் இடம்பெற்ற ஷாதுலியா மனாகிப் தமாம் மஜ்லிஸ்

(பீ.எம். முக்தார்)

கஹடோவிட்ட மின்னலுல் இப்றாஹிம்யா ஸாவியாவில் 07 தினங்களாக நடைபெற்றுவந்த ஷாதுலியா மனாகிப் தமாம் மஜ்லிஸ் 07ஆம் திகதி கஹடோவிட்ட மஸ்ஜிதின் நூர் ஷாதுலியா ஜும்ஆ மஸ்ஜிதில் தமாம் மஜ்லிஸ் சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு உம்மு ஸலாயா அஜ்வாத் அல் பாஸி அரபு கல்லூரி அதிபர் உஸ்தாத் மௌலவி அஷ்மத் கூபி (மழ்ஹரி) ரமீஸல்பி முத்தகுமுஷ் ஷாதுலி அவர்கள் முஸாக்கரா நிகழ்த்தினார். மூத்த உலமா மௌலவி அல்ஹாஜ் ஏ.எம்.எம். அப்துல் ஸலாம் (பலாஹி) நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

உலமாக்கள், முகத்துமீன்கள், சீனன்கோட்டை ஹழரா ஜமாஅத்தின் ஆசிகுர் ரஸூல் முன்சிதீன்கள், இஹ்வான்கள், முஹிப்பீன்கள், முரிதீன்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வள்ளியம்மன் ஆலயத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் தீமிதிப்பு வைபவம் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: கெலும் குணதிலக்க)

வீடுகளை உடைத்து கொள்ளையிட்ட மூவர் ராகமவில் பொலிஸாரால் கைது

ராகமவில் இரு வீடுகளை உடைத்து 20இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பொருட்களை திருடிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பட்டுவத்த பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட இரண்டு வீடுகளில் பொருட்களை திருடச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இரவில் வீட்டிற்குள் நுழைவதை கண்காணிப்புக் கெமராக்களில் பதிவாகியுள்ளன. அந்த தகவல் மற்றும் உளவுத்துறையின் அடிப்படையில் பொலிஸார் விசாரணை நடத்தி குறித்த நபர்களை கைது செய்தனர்.

இவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையான வர்கள் என ராகம பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் புத்திக ராஜபக்ஷ தெரிவித் தார். சந்தேகநபர்களை வத்தளை நீதவான் முன் னிலையில் ஆஜர்படுத்திய பின்னர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்ட் டுள்ளனர்.

பெரும்போக விவசாயத்துக்குரிய எரிபொருள் வழங்க நடவடிக்கை

பெரும்போக விவசாயத்துக்கு தேவையான எரிபொருள் அளவை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த விவசாயிகளுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் டீசல் விநியோகம் செய்யப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் அறுவடை நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விவசாயப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை சந்தித்து நெல் அறுவடை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

திகதி 08.08.2022 திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹாஜனசம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4841
ரூ. 7,868,070.00
அடுத்த சீட்டிழுப்பின் சுமப்பரிசு
ரூ. 31,425,803.60
E 8 3 8 3 5 6

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3083
ரூ. 3,955,040.00
I 49 52 55 60
ரூ. 68,019,218.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 871
ரூ. 3,118,040.00
K 10 27 44 45
ரூ. 120,700,756.40

ராசிபல மஹஜன Hancahana
சீட்டிழுப்பு இலக்கம்: 150
ரூ. 5,576,180.00
04 21 40 47 மகரம்
ரூ. 3,641,991.60

Mega POWER 26+
சீட்டிழுப்பு இலக்கம் 1189
ரூ. 2,352,060.00
ரூ. 264,620,510.00
Z 14 05 09 35 44
ரூ. 10,000,000.00 ரூ. 10,000,000.00
National Lotteries Board

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தால் நிந்தவூரில் தொடர் கடலரிப்பு

ஓரிரு வாரங்களில் மீனவர் கட்டடத்தைபோன்று எஞ்சிய பகுதிகளும் அழிவுக்குள்ளாகலாமென மக்கள் அச்சம்

(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைய நாட்களாக ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக கடலோரத்தை அண்டிய கரையோரப் பகுதிகள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் அவர்களின் பல்வேலைக் கட்டடங்களும் சேதத்துக்குள்ளாகி நாளுக்குநாள் கடலால் அள்ளுண்டு போகின்றன.

இந்தத் தொடர் கடலரிப்பின் காரணமாக மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசித்துக் கொள்வதற்கும் அவற்றை சிறந்த முறையில் நிர்வகித்துக்கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மீண்டும் திறக்கப்பட்ட ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தால் இக்கடலரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் உடனடியாக அதனை மூடும் பட்சத்தில் தொடர் கடலரிப்பை தடுக்கமுடியும் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாக பல பாதிப்புகள் ஏற்பட்டிருந்த போதும், அது அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாகவே நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்தது. இவ்வாறிருக்கும்





நிலையில், நிந்தவூர் 9 ஆம் பிரிவு பிரதேசஸ் ஜுஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டடம் தொடர் கடலரிப்புக் காரணமாக முழுமையாக கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்தில் மீனவர்கள் தங்களது மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததுடன், நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூக நிலையம் கட்டமாகவும் இயங்கிவந்தது.

இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் இதர நிகழ்வுகள் என்பன நாள்தோறும் நடைபெற்று வந்ததுடன், இந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கட்டடத்தின் ஒரு பகுதி கடந்த காலங்களில் தொடர் கடலரிப்பின் காரணமாக கடலரிப்புக்கு உள்ளாகியிருந்தது. ஆனால், மீதமாக இருந்த இரண்டு மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி முழுமையாக கடலரிப்பினால் தேமதடந்துள்ளது. எஞ்சிய பகுதிகளும் இன்னும் ஓரிரு வாரங்களில் கடலால் அள்ளுண்டு போகும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் அச்சம் வெளியிடுகின்றனர். இருந்தபோதும் கடந்த காலத்தில் இக்கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் ஏற்பட்ட கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலோர பாதுகாப்புத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் தற்காலிகமாக மண்மூடைகள் நிரப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தாலும் கடல் அலைகளுக்கு அது தாக்குப்பிடிக்க முடியாமல் அள்ளுண்டு வருகின்றது.

ஆனால், இந்தப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தை நிரந்தரமாக பாதுகாப்பதனால எந்த நடவடிக்கைகளையும் நிந்தவூர் பிரதேச செயலகமோ அல்லது கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமோ எடுக்கவில்லை என்பதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டத்தக்கது.

இந்நிலை தொடருமானால் இறுதியில் கடற்கரை வீதியினூடாக பயணம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையும் நிந்தவூர் பிரதேசத்திற்கு ஏற்படும் என மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர்.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டு மீள திறக்கப்பட்ட பின்னர் நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற அதிகமான கரையோரப் பிரதேசங்கள் கடல் அலையினால் அழிக்கப்பட்டு இந்த நிலங்கள் இருந்த அடையாளமே தெரியாமல் செல்வதாக மீனவர்கள் குறைகூறி வருகின்றனர். இந்தப் பகுதியில பிரதேச மக்களின் தென்னந்தோப்புகள், மீனவ வாடிகள் என நீண்டுகொண்டே செல்வது தொடர்கதையாகின்றது.

எனவே, நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கும் வளங்களையாவது பாதுகாப்பதற்கு இவர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என இப்பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

வழக்கொழிந்துபோன அரிய – அழகிய சொற்கள் இலங்கையின் பேச்சுத்தமிழில் பாவிக்கப்படுவது மகிழ்ச்சி

தென் இந்திய நடிகர் நாசர் மட்டக்களப்பில் தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

எழுத்து வடிவத்தில் கூட வழக்கொழிந்துபோன பல அரிய – அழகிய சொற்கள் சர்வசாதாரண மாக மட்டக்களப்பு பேச்சுத்தமிழில் பாவிக்கப்படுவதை யிட்டு மகிழ்சியடைவதாக தென் இந்தியாவின் பிரபல நடிகரான நாசர் மட்டக்களப்பில் தெரிவித்தார்.

கடந்த வாரம் மட்டக்களப்பில் இடம்பெற்ற கலை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாசர் சிலிமார் கலைஞர் எனப் பரவலாக அறியப்பட்டிருந்தாலும், அவர் அடிப்படையில் ஒரு சிறந்த மேடை நாடகக் கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் தொடர்பாக கல்வியியலும் மாணவர்களின் திறன் விருத்திக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி பாரதி கென்னடியின் அழைப்பின்பேரில் அவர் வருகை தந்திருந்தார்.

சுவாமி விபுலானந்தரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்த பின்னர், நிறுவகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் போன்றோரால் மன்டபத்திற்குள் அழைத்து வரப்பட்டார். மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நிறுவகத்தின் இசைத்துறை விரிவுரையாளர்களால் விபுலானந்த கீதம் பாடப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப் பட்டது. நிறுவகத்தின் பணிப்பாளரினால் தலைமையுரை ஆற்றப்பட்டது.

இதன்போது சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் வளர்ச்சியில் தமிழ்நாடு அரச உட்பட தென்னிந்திய பிரபலங்களின் பங்களிப்பு தொடர்பாக நினைவுகூரப்பட்டதுடன், நாசரின் வருகையின் முக்கியத்துவமும் தெளிவுபடுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நாசர் சிறு உரையாற்றினார். மட்டக்களப்பு பேச்சுத்தமிழ் தமது காதுகளில் பாடல்போன்று ஒலிப்பதாக அவர் கூறியபோது, அரங்கில் கூடியிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மேலும், எழுத்து வடிவத்தில் கூட வழக்கொழிந்துபோன பல அரிய – அழகிய சொற்கள் சர்வசாதாரணமாக மட்டக்களப்பு பேச்சுத்தமிழில் பாவிக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

பின்னர் மேடை நாடகம், அரங்கியல், ஈழத்து சினிமா, உலக சினிமா நடிகராகவும் இயக்குநராகவும் நாசரின் அனுபவங்கள், அறிவுரைகள் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் நிகழ்வு இடம் பெற்றது.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தினால் நாசர் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. மட்டக்களப்பின் சினிமாக் கலைஞர்களின் சார்பில் பங்குபற்றியிருந்த வர்களாலும் நாசர் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

சில ஒலியர்களும் தமது அன்பின் வெளிப் பாடாக தம்மால் வரையப்பட்ட நாசர் ஓவியத்தை பரிசளித்தனர்.

கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கல்முனை நிருபர்)

கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்ற கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக கல்முனை மாநகர ஆணையாளர்கள் பதவியேற்காமல் தடுக்கப்படுவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரை தொடர்புகொண்டு வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாண ஆளுநரினால் கல்முனை மாநகர ஆணையாளராக அண்மையில் நியமிக்கப் பட்ட ஏ.எல்.எம்.அலிமி நேற்று முன்தினம் (08) கடமைகளை பொறுப்பேற்க சென்றபோது, அவர் மீது வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உறுதி

இதற்கு முன்னரும் கல்முனை மாநகர ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட என்.சிவலிங்கம், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோதும் அவரும் தடுக்கப்பட்டார்.

மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகளில் மேய ருவே தலையிட முடியாது. தனக்குரிய அதிகாரத்தின்கீழ் மாநகர ஆணையாளர் நியமனத்தை மேற்கொண்டுள்ளேன். இதனை ஒருபோதும் கல்முனை மேயர் சவாலுக்குட்படுத்த முடியாது. இதனால், கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் கடமைகளை பொறுப்பேற்க மேயர் அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல், தொடர்ச்சியாக ஆணை யாளர்கள் கடமைகளை பொறுப்பேற்பதற்கு இடையூறு விளைவிக்கப்படும் பட்சத்தில் கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

கிழக்கு செய்திகள்

easttamilan@gmail.com

பாடசாலை மாணவி தூக்கிட்டுத் தற்கொலை

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் சோகம்

(மண்டூர் நிருபர்)

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு பிரதேசத்தில் சிறுமியொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று முன்தினம் (08) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு (தெற்கு), கொக்கட்டிச் சோலை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி யான குருகுலசிங்கம் டிவினா (14 வயது) என்பவரே இவ்வாறு தூக்கிட்டுக் கொண்டுள்ளதுடன், அவரின் வீட்டு அறையிலிருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று உயிரிழந்த சிறுமியின் பெற்றோர் தங்களின் வயலை பார்வையிட சென்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து வீட்டில் யாரும் இல்லாத நிலையில், பாடசாலை சென்று வீடு திரும்பிய பின்னர் இவ்வாறு தூக்கிட்டுக்கொண்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல், சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச் சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூத்த சன்மார்க்கர் ஆலிம் ஹாசீம் மௌலவி காலமானார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தும்புருவாவை ஜுமாஅதைச் சேர்ந்தவரும், ஹெம்மாதமை ஜும்இய்யதுல் உலமா சபையின் முன்னாள் உபதலைவரும், ஓய்வு பெற்ற அதிபருமான அல்-ஹாஜ் ஹாசீம் மௌலவி (வயது 88) நேற்று முன்தினம் (08) காலமானார்.

தும்புருவாவைக் கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு பிறந்த ஹாசீம் ஆலிம், அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த காலி பஹ்ஜத்துல் இர்ஷாதிய்யா அரபுக் கல்லூரியில் 1958 ஆம் ஆண்டு எண்மாற்க்க கல்வியைக் கற்று மௌலவிப் பட்டம் பெற்றார்.

அன்னாரது மறைவு குறித்து ஹெம்மாதமை போரம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில்,

ஹெம்மாதமை பிரதேசத்தில் குறிப்பாகவும் இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளில் பொதுவாகவும் சன்மார்க்கப் பணியில் ஈடுபடக் கூடிய உலமாக்களை உருவாக்குவதற்காக 1970 களின் ஆரம்பத்தில் ஓலைமனல் உருவாக்கப்பட்ட ஸஹிய்யா அரபுக் கல்லூரியினதும், அதன் ஸ்தாபக நிர்வாகம் 'ஹெம்மாதமை ஜும்இய்யதுல் உலமா' அமைப்பினதும் ஸ்தாபக உறுப்பினராகவும் அதன் ஸ்தாபக செயலாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்து சமய சன்மார்க்க வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை அல்லாஹ் எம்.எச்.எம். ஹாசீம் மௌலவியின் மறைவையிட்டு ஹெம்மாதமை போரம் தமது மிகுந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஹாஷிம் ஆலிமின் மறைவினால் கவலையுறுகிற்குக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் சமூக, சமய பணிகளை அல்லாஹ் தஆலா அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமெனும், அவரது குற்றம் குறைகளை மன்னித்து மேலான சுவர்க்கத்தை அவருக்கு அருளவேண்டுமென்றும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை நாம் பிரார்த்திக்கின்றோம் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாஸா நேற்று (09) நண்பகல் தும்புருவாவ மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கூட்டிணைந்த செயற்றிட்டத்துக்கான திட்ட முன்மொழிவுகள் குறித்து விளக்கமளிப்பு

(தீகவாபி நிருபர்)

'பெண்கள் மற்றும் பிள்ளைகளை சமாதான நல்வினைக்க செயற்பாடுகளில் வலுப்படுத்தல்' எனும் திட்டத்தின் செயற்பாடுகளில் ஒன்றான 'கூட்டிணைந்த செயற்றிட்டத்துக்காக' பயிற்றப்பட்ட பெண் தலைவிகளால் எழுதப்பட்ட திட்ட முன்மொழிவுகளை பலதரப்பட்ட பங்குதாரக் குழு உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கப் படுத்தும் நிகழ்வு அண்மையில் கல்முனையிலுள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்றது.

'சேர்ச் போர் கொமன் கிரவுன்ட்' நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் அக்கரைப்பற்றை தளமாகக்கொண்டியங்கும் 'பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கு' நிறுவனத்தால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள கிராம மட்ட கழக உறுப்பினர்களால் இந்தத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் 'சேர்ச் / போர் கொமன் கிரவுன்ட்' நிறுவன ஆலோசகர் றனினி ரெட்னாராஜா, கண்காணிப்பு முகமையாளர் சதாத் மொஹமட், கிராமீன் பெண்டேசன் இந்தியா நிறுவன வியாபார திட்ட ஆலோசகர் கே. சுபாஜினி, 'பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கு' நிறுவன இணைப்பாளர் வாணி மைன், பெண்கள் மற்றும் பிள்ளைகளை சமாதான நல்வினைக்க செயற்பாடுகளில் வலுப்படுத்தல்' திட்ட இணைப்பாளர் கமலவாணி சுதாகரன் மற்றும் பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள், சிவில் சமூக பெண்கள், சமூக மட்ட தலைவர்கள், அரச – அரச சார்பற்ற மேல் நிலை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கல்முனை புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக நஜீம் நியமனம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக எம்.எஸ்.ஸஹுதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என்.புள்ளநாயகம் ஆகியோரிடமிருந்து தனது நியமனக்கடிதத்தை நேற்று முன்தினம் (8) பெற்றுக்கொண்டார்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸஹுதுல் நஜீம், இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பல வருட கால அனுபவத்தினை பெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர் என்பதுடன், ஏலவே சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது நியமனத்தை தொடர்ந்து கல்முனை வலயக் கல்வியின் சேவைக் காலம் ஒரு பொற்காலமாகவும் சிறப்புமிக்கதாகவும் மாணவ சமூகத்தின் கல்வி செயற்பாடுகளில் முன்னேற்றமிக்கதாகவும் அமைபும் என பல தரப்பினர்களும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் மருதமுனை பகுதியை சேர்ந்த எம்.எஸ்.ஸஹுதுல் நஜீம் விஞ்ஞான பட்டதாரி என்பதுடன், விஞ்ஞான முதுமாணி கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

கடந்த 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி இலங்கை கல்வி கல்வி நிர்வாக சேவையிலே இணைந்துகொண்ட அவர், கடந்த 2019 மூன்றாம் மாதம் 12ஆம் திகதிதரம் 1க்கு பதவி உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மும்மொழியிலும் தேர்ச்சிபெற்ற இவருக்கு, கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியாவார். அத்துடன், 15 வருட கல்வி நிர்வாக சேவை அனுபவத்தையும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

QR முறைமையினால் கந்தளாயில் எரிபொருள் வரிசைகள் வீழ்ச்சி

(கந்தளாய் நிருபர்)

திரு கோணமலை மாவட்டத்தின் கந்தளாய் எரிபொருள் நிலையங்களில் QR முறைப்படி எரிபொருள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனால் எரிபொருளுக்காக காத்திருக்கும் மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அரசால் நிர்ணயிக்கப்பட்ட பணத்தொகைக் கேற்ப எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் சிறப்பான முறையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது கர்ப்பினித் தாய்மார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் பதவியேற்பில் சூழ்ச்சி!

(மாளிகைக்காடு நிருபர்)

ஆளுநரின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தும் நிர்வாகத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அல்-மீஸான் பௌன்டேஷன் கோரிக்கை

கல்முனை மாநகர சபைக்கு புதிதாக நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பில் ஏற்பட்டுள்ள சூழ்ச்சி குறித்து மாநகர சபை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அல்-மீஸான் பௌன்டேஷன் அமைப்பு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அல்-மீஸான் பௌன்டேஷன் ஸ்ரீலங்கா அமைப்பினால் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போன்றோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஊழல்கள், அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் காரணமாக பல்வேறு விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில், கல்முனை மாநகர சபைக்கு புதிதாக நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்ற கல்முனை முதல்வர், ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், துப்புரவு தொழிலாளி, வேலைத்தள உதவியாளர் போன்றோருக்கு எதிராக விசாரணை மேற்கொண்டு கடும் நடவடிக்கை எடுக்க கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போன்றோர் முன்வர வேண்டும்.

கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்திருந்த ஏ.எல்.எம்.அஸ்மி ஆளுநரினால் கல்முனை மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோது அவரை கல்முனை மேயர், ஊழல் குற்றசாட்டு விசாரணையின் கீழ் இருந்துவருவதுடன், கடந்த மார்ச் மாதம் விடுவிப்பு செய்யப்பட்ட ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர், சிற்றூழியர்கள் இணைந்து தடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் கல்முனை மாநகர ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் என்.சிவலிங்கம், கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோதும் அவரும் தடுக்கப்பட்டார். இவ்வாறு தொடர்ச்சியாக கல்முனை மாநகர ஆணையாளர்கள் பதவியேற்கமால் தடுக்கப்படுவது தொடர்பில் கிழக்கு மாகாண உயர் நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

ஊழல் குற்றச்சாட்டுகள், முறைகேடான நிர்வாகம், அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் நிறைந்து பல்வேறு தளங்களில் விசாரணை இடம்பெற்றுவரும் கல்முனை மாநகர நிர்வாகத்தினரின் இவ்வாறான செயற்பாடு ஆளுநரினதும், அரச உயரதிகாரிகளினதும் அதிகாரங்களுக்கு விடப்படும் சவாலாக அமைந்துள்ளது. தகவலறியும் சட்டத்தினூடாக ஒழுங்கான தகவல்களை வழங்காமை, ஊழலுக்கு துணைபுரிய மறுக்கும் உத்தியோகத்தர்களை பழிவாங்குதல், துஷ்பிரயோகங்களுக்கு துணைபோகாத நீதியான அதிகாரிகளை அழுத்தம் கொடுத்து சபையை விட்டு வெளியேற்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற நிறைய விடயங்கள் இங்கு இடம்பெற்று வருகின்றன.

அல்- மீஸான் பௌன்டேஷன்- ஸ்ரீலங்கா

AL-MEEZAN FOUNDATION-SRILANKA

ஆளுநரினால் நியமிக்கப்படும் ஆணையாளர்களை சாதாரண துப்புரவு தொழிலாளர்களும், வேலைத்தள தொழிலாளிகளும் சவாலுக்குட்படுத்துவதும், கடந்த மார்ச் மாதம்முதல் ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணைக்காக விடுவிக்கப்பட்ட ஆணையாளர் சட்டவிரோதமாக தனது பதவியில் அமர்ந்துகொண்டு கோப்புகளுக்கு ஒப்பமிடுவதும், சம்பளம் பெறுவதும், புதிய ஆணையாளரை கடமையேற்க விடாது தடுத்து நிறுத்தவதும், அரசியல் தலையீடுகள் மூலம் அழுத்தம் பிரயோகிப்பதும் ஏற்புடையதல்ல.

ஆளுநர் தனக்கு வழங்கப்பட்ட உச்சகட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இவர்களை உரியமுறையில் விசாரண செய்து பணி நீக்கம் அல்லது பணி இடைநிறுத்தம் செய்து விசாரணை மேற்கொண்டு கல்முனை மாநகரத்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முன்வர வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் - மாணவர்களை பாடசாலைக்கு வரவழைக்க விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலைகளில் கல்வி பயிலும் 2021 மற்றும் 2022 ஆண்டுக்கான உயர்தர மாணவர் தலைவர்களின் ஏற்பாட்டிலான எரிபொருள் பிரச்சினையை மையப்படுத்தி பாடசாலைக்கு ஆசிரியர்களையும், மாணவர்களையும் வரவழைத்தல் எனும் மாபெரும் விழிப்புணர்வு சைக்கிளோட்டம் நேற்று முன்தினம் (08) மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் தலைமையிலான நிர்வாகமும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் வின்சன்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் தலைமையிலான நிர்வாகத்தினர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் அனுசரணையுடன் விழிப்பூட்டும் சைக்கிளோட்டம் நேற்று முன்தினம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இச்சைக்கிளோட்டம் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் நுழைவாயிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதியின் ஊடாக மட்டக்களப்பு - திருமலை வீதியில் கோப்பின் தனியார் விடுதிவரையும் சென்று அங்கிருந்து மீண்டும் பிரதான வீதி வழியாக வந்தடைந்து ரெலிகொம் வீதியூடாக ஜீ.வீ தனியார் வைத்தியசாலை வரையும் சென்று மீண்டும் பிரதான வீதி வழியாக பாடசாலைக்கு சைக்கிளோட்டம் நிறைவடைந்தது.

இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்கள், சாரண மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள். இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்ட ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் அதிபர் இராதுரை பால்கர், பிரதி அதிபர் எஸ்.நந்தகோபால், வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார் மற்றும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கலூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எந்திரி வை.கோபிநாத், பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பகீரதன், வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தலைவி திருமதி தர்சினி சந்தரநேசன், சாரண குழுத்தலைவர் எம்.சந்திரன், பொறியியலாளர் என்.திருவருட்செல்வம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வரலாற்று சிறப்புமிக்க கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் வரல்சுமி விரத பூஜைகள் அண்மையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. இதனோடு அதிகளவிலான மக்கள் விசேட சிறப்பு பூஜையில் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள் - மட்டக்களப்பு நிருபர்)

போடியார் புலம்பல்!

சர்வகட்சி ஆட்சியில கூட்டமைப்பு கட்டாயம் பங்குபற்றவேணுமாம் எண்டு ஜனாதிபதித் தேர்தலில வேட்பாளராக போட்டிபோட்டு தோல்வி கண்ட டலஸ் ஐயா சொல்லி இருக்காரு எலுவா? அந்த மனிசன் இத ஏன்டாப்பா தமிழ்க் கூட்டமைப்புக்கு அட்வைஸ் பண்ணுறாரு. அது பங்கேற்கிறதா இல்லையா எண்டது சம்பந்தருக்கு தெரியும். உங்கள ஆதரிச்சதால உங்கட கத எல்லாம் கேட்கோணும் எண்ட மாதிரி எலுவா உங்கட கத..!

அஹதிய்யா பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது மிஸ்பாஹுல் ஹுதா அஹதிய்யா பாடசாலையினால் முஹர்ரம் புதுவருடத்தினை முன்னிட்டு மாணவர்களின் கலை நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது கமு /அல்-ஜலால் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மிஸ்பாஹுல் ஹுதா அஹதிய்யா பாடசாலையின் அதிபர், கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.தௌபீக்கின் (நளீமி) தலைமையில், இந்த அஹதிய்யா பாடசாலையின் ஆசிரியர் எம்.எச்.எம். சியாமின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில் மாணவர்களது பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக செய்த மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதிகளாக கமு/ அல்-ஜலால் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம்.ஸைபீன் மற்றும் அப்பாடசாலையின் இஸ்லாம் பாடஆசிரியர் மௌலவி எம்.ஐ.எம்.இத்ரீஸ், சாய்தமருது சமூக அமைப்பின் தலைவர் எ.கி.அன்வர், அறிவிப்பாளர் ஏ.றொஸான் முஹம்மட் உள்ளிட்ட சாய்ந்தமருது மிஸ்பாஹுல் ஹுதா அஹதிய்யாப் பாடசாலையின் ஆசிரிய ஆசிரியைகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

சமூர்த்தி வங்கி பணியாளர்களுக்கான மூன்று நாள் இணையத்தள பயிற்சிநெறி



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியிலுள்ள சமூர்த்தி வங்கியாளர் களுக்கான இணையத்தள பயிற்சிநெறியொன்று அண்மையில் (06) பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி தலைமையில் 97-ஆம் கட்டை சந்தியிலுள்ள வங்கி கட்டடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் தம்பலகாமம் சமூர்த்தி வங்கி, தம்பலகாமம் கிழக்கு சமூர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டதுடன், வளவாளராக திருகோணமலை மாவட்ட சமூர்த்தி இணையத்தள பொறுப்பதிகாரி வீ.அன்வர்கான் கலந்துகொண்டார்.

இப் பயிற்சிநெறியானது மூன்று நாட்கள் இடம்பெறவுள்ளது. இதில் இணையத்தள பாவனை, வங்கி கணக்கு தொடர்பிலான ஒன்லைன் முறைமை உள்ளிட்ட பலதகவல் தொழில்நுட்ப முறைமை என பல விடயங்கள் பயிற்சியளிக்கப்பட்டன.

இதில் சமூர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹில்ப்புல்லா உட்பட சமூர்த்தி வங்கி ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கிவைப்பு

(கிண்ணியா நிருபர்)

கிண்ணிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூரங்கல் கிராமசேவகர் பிரிவு கிண்ணியா அல்-அமீன் மகாவித்தியாலயில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் பாடசாலை மாணவர்களின் கும்பங்களுக்கு சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் பாடசாலை வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற இந்த நிகழ்வில், உலருணவுப் பொதிகளானது முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக வழங்கப்பட்டன. இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழியர்கள் பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதிகளில் சிரமதானப் பணிகள்

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தை அண்டிய பல பகுதிகளில் அண்மையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக் கப்பட்டன.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தை அண்டிய பல பகுதிகளில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையில் சிரமதானப் பணியை பொலிஸாருடன் இணைந்து பொதுமக்கள் முன்னெடுத்தனர்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதிகளிலுள்ள குப்பை கூளங்கள் சுத்தம் செய்யப்பட்டன.

இந்த சிரமதானப் பணிகளில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழலிலுள்ள பொதுமக்களும் தங்களது ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர். இதன்போது வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் பொதுமக்களின் உதவியுடன் அவ்விடத்தில் இருந்து அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், காலை முதல் மதியம் வரை பொலிஸாரின் திடீர் சோதனை நடவடிக்கை ஆரம்பமாகியதுடன், பொதுமக்களுக்கான விசேட விழிப்பூட்டல்களும் மேற்கொள்ளப் பட்டன.

இந்நடவடிக்கையானது சாய்ந்தமருது பிரதேச பிரதான சந்திகள், பொதுமக்கள் ஒன்றுகூடும் முக்கிய இடங்களில் மேற் கொள்ளப்பட்டன.

மேற்படி நடவடிக்கையின்போது சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தவது, கவனக்கவசம் அணியாது செல்வது, ஒரு மோட்டார்சைக்கிளில் இரு வருக்கு மேற் பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, குடிபோதையில் வாகனம் ஓட்டுவது தொடர்பில் ஆலோசனைகள் சாய்ந்தமருது பொலிஸாரினால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு, சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு, போக்குவரத்து பிரிவு, சிறு குற்றத்தடுப்புப் பிரிவு, பெருங் குற்றத்தடுப்புப் பிரிவு, சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் போர்க்கப்பல் துறைமுகத்தில் தரித்துச் செல்ல இலங்கை அரசு அனுமதி

சீனாவிலிருந்து பாகிஸ்தான் செல்லும் பி.என்.எஸ். தைமூர் ஏவுகணைத் தாங்கி போர்க்கப்பல் இலங்கை துறைமுகத்தில் நான்கு நாட்கள் (ஒகஸ்ட் 12 முதல் 15ஆம் திகதிவரை) தரித்துச் செல்ல இலங்கை அரசு அனுமதியளித்துள்ளது.

பாகிஸ்தான் கடற்படைக்காக பி.என்.எஸ். தைமூர் என்ற ஏவுகணைத்தாங்கி போர்க்கப்பலை சீனா உருவாக்கியுள்ளது. சீனாவின் ஷாங்காய் நகரிலுள்ள ஹுடாங் - ஸாங்குவா கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்ட இந்தக் கப்பல் சீனாவிலிருந்து புறப்பட்டு பாகிஸ்தானுக்குச் செல்கிறது. வழியில் கம்போடியா மற்றும் மலேஷிய கடற்படையுடன் பயிற்சியில் ஈடுபட்டது. மலேஷியாவிலிருந்து புறப்படும் போர்க்கப்பலை அண்டை நாடான பங்களாதேஷில் ஒகஸ்ட் 7 - 10 வரை நிறுத்திவைக்க திட்டமிடப்பட்டது.

பங்களாதேஷுக்கு மிக நெருங்கிய நட்பு நாடான இந்தியா இதற்கு கண்டனம் தெரிவிக்கும் என்பதால் அந்நாட்டு துறைமுகத்தில் கப்பலை நிறுத்திச் செல்ல பிரதமர் ஷேக் ஹசீனா அனுமதி மறுத்தார். மேலும் பங்களாதேஷ் நிறுவுனரும் ஹசீனாவின் தந்தையுமான ஷேக் முஜிப்-உர்-ரஹ்மானின் நினைவு தினம் ஒகஸ்ட் 15இல் அனுஷ்டிக்கப்படுகிறது. இவர் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளால் 1975 ஒகஸ்ட் 15இல் படுகொலை செய்யப்பட்டார்.

இதன் காரணமாகவும் கப்பலை நிறுத்த ஹசீனா மறுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. இற்நிலையில், மலேஷியாவிலிருந்து புறப்படும் சீனக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் ஒகஸ்ட் 12 - 15 வரை தரித்துச் செல்ல இலங்கை அரசு அனுமதியளித்துள்ளது.

இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது நியாயமற்றது

இதேவேளை, இலங்கைக்கு சில நாடுகள் அழுத்தம் கொடுப்பது நியாயமற்றது என்று இந்தியாவை சீனா மறைமுகமாக விமர்சித்துள்ளது.

முன்னதாக சீனாவின் 'யுவான் வாங் 5' என்ற உளவுக் கப்பலை இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நாளை 11ஆம் திகதிமுதல் 17ஆம் திகதிவரை நிறுத்திவைக்க சீனா திட்டமிட்டது.

இந்த உளவுக் கப்பல் விண்வெளி மற்றும் செயற்கைக்கோளை கண்காணிக்கும் சீனாவின் தேசிய விண்வெளி ஆய்வு மையத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் இராணுவ ரீதியிலான பல்வேறு பயன்பாடுகளை கொண்டுள்ளதுடன், நவீன தொழில்நுட்ப ரீதியில் பல்வேறு தகவல்களை சேகரிக்கும் திறன் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கப்பல் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால், இந்திய மத்திய அரசு ஆட்சேபம் தெரிவித்தது. இதை ஏற்று, கப்பலை இலங்கை துறைமுகத்தில் நிறுத்த அந்நாட்டு அரசு மறுத்துவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின்,

"பாதுகாப்பு அச்சுறுத்தலை காரணம் காட்டி இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது அர்த்தமற்றது. தங்கள் நாட்டின் நலன் கருதி, வேறு எந்த நாட்டுடனும் நல்லுறவு பேணுவது இலங்கையின் உரிமை. சீனாவின் அறிவியல் ஆய்வுகளை ஆக்கப்பூர்வமாக பார்க்க வேண்டும். சீனா - இலங்கை உறவில் இடையூறு விளைவிப்பதை, சம்பந்தப்பட்ட நாடு நிறுத்திக்கொள்ள வேண்டும்" - என தெரிவித்துள்ளார்.

அத்துமீறி நுழைந்த பாகிஸ்தானின் போர்க்கப்பலை துரத்தியடித்த இந்தியா

இதேவேளை, இந்திய கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த பாகிஸ்தான் போர் கப்பலை இந்திய கடலோர காவல்படை விமானம் துரத்தி அடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

பாகிஸ்தானைச் சேர்ந்தது பிஎன்எஸ் ஆலம்கீர் கப்பல். இந்த கப்பல் சமீபத்தில் குஜராத் கடற்பகுதியில் இரு நாடுகளின் கடல் எல்லை கோடு பகுதியை கடந்து இந்திய பகுதிக்குள் நுழைந்தது. இதனையறிந்த இந்திய கடற்படையினர், இந்திய கடலோர காவல்படை அதிகாரிக்கு தகவலளித்தனர்.

உடனடியாக குறித்த பகுதிக்கு விரைந்த இந்திய கடலோர காவல் படையின் டோர்னியர் கண்காணிப்பு விமானம், பாகிஸ்தான் போர்க் கப்பலின் இருப்பிடம் குறித்து எச்சரிக்கை விடுத்ததுடன் அதன் பகுதிக்குத் திரும்பும்படி வலியுறுத்தியது.

டோர்னியர், ஆலம்கிர் மீது வட்டமிட்டுக் கொண்டே இருந்தது. இந்திய தரப்பினர் பாகிஸ்தான் கப்பல் கெப்டனுடன் தொடர்பு கொண்டனர். ஆனால், அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை. இதையடுத்து டோர்னியர் விமானம் மூன்று முறை பாகிஸ்தான் போர்க்கப்பலுக்கு முன்னால் பறந்து சென்று எச்சரிக்கை விடுத்தது. இதையடுத்து பின்வாங்கிய ஆலம்கீர், பாகிஸ்தான் பகுதிக்கு திரும்பி சென்றது என இந்திய கடற்படையினர் தெரிவித்தனர்.

உலக செய்திகள்

பெண் நட்சத்திரம் ஒலிவியா காலமானார்

ஹொலிவுட்டின் சிறந்த பாடகியாகவும் நடிகையாகவும் வலம் வந்த ஒலிவியா நிவ்டன் (வயது 73) புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலமானார்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை தனது இன்ஸ்டகிராமில் இறுதியாக பதிவுசெய்த படம் தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

1948ஆம் ஆண்டு பிறந்த ஒலிவியா, ஏராளமான விருதுகளுக்குச் சொந்தக்காரராவார். 1973ஆம் ஆண்டுமுதல் 1983ஆம் ஆண்டுவரை ஹொலிவுட்டின் தவிர்க்க முடியாத நட்சத்திரமாக இவர் திகழ்ந்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கலிபோர்னியாவில் தங்கியிருந்த இவர் அந்நோயால் அவதியுறுவோருக்காக அறக்கட்டளையொன்றை உருவாக்கி சேவை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

மனிதர்கள் வாழக்கூடிய 'சூப்பர்-எர்த்' கண்டுபிடிப்பு



பூமியைப் போலவே மனிதர்கள் வாழக்கூடிய பண்புகளைக்கொண்ட ஒரு 'சூப்பர் எர்த்'தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியை விட 4 மடங்கு நிறைகொண்ட சூப்பர் எர்த், ஒரு வருடம் முழுவதும் முடிக்க வெறும் 10.8 நாட்களாகும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பூமியிலிருந்து 37 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள இந்தக் கிரகம் சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தைத் தான் சுற்றி வருகிறது.

சுற்று வட்டப்பாதையில் நேராகச் செல்லாமல் உள்ளேயும் வெளியேயும் மாறி மாறி செல்கிறது.

'ராஸ் 508 பி' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த கிரகத்தின் மேற்பரப்பில் நீர் உருவாக்கத்திற்கு உகந்த வெப்பநிலை இருப்பதால், மற்ற கிரகங்களுடன் ஒப்பிடுகையில், இதில் உயிரினங்கள் இருக்கும் வாய்ப்புகள் அதிகம் என்கின்றனர்.

தென்சீனக் கடலில் தொடரும் போர்ப் பதற்றம்:

சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் இராணுவம் போர் ஒத்திகை

சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டதால் பதற்றம் நிலவி வருகிறது.

ஆசிய கற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி, கடந்த 3ஆம் திகதி சீனாவின் கடும் எச்சரிக்கையையும் மீறி தாய்வானுக்குச் சென்றார். 25 ஆண்டுகளுக்குப் பின்னர் தாய்வானுக்குச் சென்ற முதல் அமெரிக்கத் தலைவர் இவர்தான். தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வருவதால், பெலோசி பயணத்தை அதனால் ஏற்க முடியவில்லை. அவரை அனுமதித்த தாய்வானை மிரட்டும் தொனியில், அந்நாட்டை சுற்றி கடற்பகுதியில் 6 இடங்களில் போர் ஒத்திகையை நடத்தியது.

இதன் காரணமாக, தாய்வான் தீரினையில் கடுமையான போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த பயிற்சி ஞாயிற்றுக்கிழமை முடிவும் என சீனா அறிவித்திருந்தது. சீனா போர் தொடுத்தால், அதை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என தாய்வான் இராணுவம் பதிலளித்தது. ஞாயிற்றுக்கிழமை கடந்தும், தாய்வான் எல்லையோரத்தில் சீனா தனது போர்ப் பயிற்சிகளை தொடர்ந்து வருகிறது. இதனை தாய்வான் கடுமையாக விமர்சித்துள்ளது. இந்நிலையில், சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் இராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டதால் பதற்றம் நிலவி வருகிறது.

போர் ஒத்திகை ஏற்கனவே திட்டமிடப்பட்டதுதான் எனவும் பதிலடி அல்ல எனவும் தாய்வான் அரசு விளக்கமளித்துள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் தாய்வானுக்கு ஆதரவாக உள்ளதால் தென் சீனக் கடலில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

சீனா மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது

இற்நிலையில், தாய்வானை சுற்றி இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள சீனா, மேற்கொண்டு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது என தாம் நினைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்தை அடுத்து அந்தத் தீவை சுற்றி இராணுவப் பயிற்சி மேற்கொண்டுள்ள சீனாவின் நடவடிக்கை குறித்து முதன்முறையாக கருத்து தெரிவித்துள்ள ஜோ பைடன், ஆத்திரமூட்டும் வகையில் செயற்படும் சீனாவுக்கு தொடக்கத்திலிருந்து கண்டனம் தெரிவித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சீனாவின் இராணுவ ஒத்திகை கவலையளிக்கும் வகையில் இல்லை என்றபோதும் பயிற்சி மேற்கொண்டுள்ள இடத்தைவிட்டு நகர்வதுதான் கவலை அளிக்கிறது என்றும் ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்பின் கடற்கரை இல்லத்தை சுற்றிவளைத்த புலனாய்வுத்துறை

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பின் இல்லத்தில் புலனாய்வுத்துறை அதிகாரிகள் (எப்பிஐ) சோதனை நடத்தியுள்ளனர். இந்த சோதனை அமெரிக்காவின் இருண்ட காலம் என்று ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறும்போது இரகசிய ஆவணங்களை பெட்டிகளில் வைத்து எடுத்துச் சென்றதாக ட்ரம்ப் மீது குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், அதுதொடர்பாக புளோரிடாவின் Palm கடற்கரையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் புலனாய்வுத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

நீதிமன்றத்தின் அனுமதிபெற்று இந்த சோதனை நடைபெற்றதாக புலனாய்வு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சோதனையின்போது ட்ரம்ப் அங்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. எவ்வித அதிகாரிகளின் சோதனை தனது பாதுகாப்பை சிதைக்கும் முயற்சி என்று ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பறக்கும் ஹெலியில் 25 புல் அப்ஸ்: கின்னஸ் சாதனை படைத்த யூடியூபர்

பறக்கும் ஹெலிகொப்டரில் 25 புல் அப்ஸ் எடுத்து நெதர்லாந்தைச் சேர்ந்த யூடியூபர், கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

டகஸ வீரர் அர்ஜென் ஆல்பர்ஸுடன் இணைந்து யூடியூப் சேனலை நடத்திவரும் ஸ்டான் பிரவுனி, கடந்த ஜூலை 6ஆம் திகதி பெல்ஜியத்தின் ஆண்ட்வெர்ப்பிலுள்ள ஹோவேனென் ஏர்ஃபீல்டில் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். ஸ்டான் பிரவுனியின் கின்னஸ் சாதனை வீடியோவை கின்னஸ் உலக சாதனை அமைப்பு தனது யூடியூப் சேனலில் பகிர்ந்துள்ளது. முந்தைய இரு சாதனைகளையும் முறியடித்து புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.

உலகளவில் 1.3 பில். அமெரிக்க டொலர் வசூல் சாதனை படைத்த 'டொப்கன் மேவ்ரி'

டொம் குரூஸ் நடிப்பில் வெளியான 'டொப்கன் மேவ்ரி' உலகளவில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வசூலித்து சாதனை படைத்துள்ள நிலையில், உள்நாட்டு வசூல் பட்டியலில் 7ஆவது இடத்திலிருந்த டைட்டானிக்கை பின்னுக்குத் தள்ளி சாதனையை முறியடித்துள்ளது.

30 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியான டொம் குரூஸின் 'டொப்கன் மேவ்ரிக்' இதுவரை அமெரிக்காவில் மட்டும் 662 மில்லியன் டொலர் வசூல செட்டியுள்ளது.

சுமார் 170 மில்லியன் டொலர் செலவில் தயாரான இந்தப் படம் தற்போது உலகம் முழுவதும் ஒரு பில்லியன் டொலருக்கும் மேல் வசூலை குவித்துள்ளது.

பிரான்சில் உள்ள லாவோஸ் விகாரைக்கு இலங்கையிலிருந்து புனித நினைவுச்சின்னங்கள்



பிரான்சில் உள்ள சர்வதேச பௌத்த நிலையத்தின் பிரதம மகருகுருவான பரவஹேர சந்திரரத்ன தேரரின் அனுசரணையில் இலங்கையின் மிஹிந்தலை ரஜ்ஜஹா விகாரையின் பிரதமகுரு தம்மரத்ன நாயக்க தேரரிடம் இருந்து கையளிக்கப்பட்ட பௌத்த நினைவுச்சின்னங்கள் பிரான்சின் பெசி செயின்ட் ஜோர்ஜஸில் உள்ள லாவோஸ் நாட்டின் வேலுவனாராம பௌத்த விகாரைக்கு அண்மையில் இடம்பெற்ற வைபவத்தின்போது கையளிக்கப்பட்டன.

பிரான்ஸ் குடியரசின் இலங்கைக் தூதுவரும் யுனெஸ்கோவிற்கான நிரந்தரப் பிரதிநிதியுமான பேராசிரியை ஷாஹிகா ஹிரிம்புரேகம இந்த விழாவில் உரையாற்றுகையில், இலங்கையில் இருந்து பிரான்சிடம் உள்ள புனித நினைவுச் சின்னங்கள் கையளிப்பதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் பௌத்த மற்றும் கலாசார உறவுகள் மேலும் வலுவடையும் எனக் குறிப்பிட்டார். மேலும், கௌதம புத்தரின் போதனைகளைப் பரப்புவதற்கும், மனித குலத்திற்கு சாந்தி மற்றும் அமைதியை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் தூதுவர் தெரிவித்தார். இது சமூகங்களுக்கிடையில் பௌத்த ஒத்துழைப்பை மேம்படுத்தும் ஒரு வரலாற்று நிகழ்வு என பரவஹேர சந்திரரத்ன தேரர் குறிப்பிட்டார்.

லாவோஸ் நாட்டின் வேலுவனாராம பௌத்த விகாரையின் பிரதமகுரு, இலங்கை அரசாங்கத்திற்கு மிகவும் புனிதமான நினைவுச்சின்னங்களை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்த தோடு, லாவோஸ்மக்கள் புனிதநினைவுச்சின்னங்களை வழிபட ஆவலுடன் காத்திருப்பதாகவும் உறுதியளித்தார். இலங்கையின் சர்வதேச பௌத்த நிலையம் மற்றும் லாவோஸின் வேலுவனாராம பௌத்த விகாரையைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் மற்றும் லாவோ மற்றும் இலங்கை பௌத்த பக்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பலமான நிறைவேற்றுக்குழு முறைமையொன்று நாடாளுமன்றத்தில் ஸ்தாபிக்கப்படுதல் அவசியம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டு

அதிகாரம் கொண்ட, பலமான நிறைவேற்றுக் குழு முறைமையொன்றை நாடாளுமன்றத்தில் ஸ்தாபிப் பதன் மூலம் இந்த பேரழிவில் இருந்து நாட்டை விடுவிக்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தேசிய மறுசீரமைப்பு திட்ட வரைவுக் குழுவின் விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளதாக பெயரளவில் உலகுக்கு காட்டுவதற்காக மேற் கொள்ளப்படும் நாடகங்களுக்கு தாம் உடன்பட வில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வலுவான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட நாடாளுமன்றக் குழு அமைப்பை நோக்கி நகர்வதன் மூலம் இந்த நாடாளுமன்றத்தின் 225 பிரதிநிதிகளும் நாட்டை கட்டியெழுப்புவதற்கான வலுவான பங் களிப்பை வழங்க முடியும் என தெரிவித்த எதிர்க்கட் சித் தலைவர், நாட்டின் நலனுக்காக இக்காரியத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு பாரிய பேரழிவிற்குள்ளாகியுள்ள நேரத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்நாட் டைக் கட்டியெழுப்புவதே எமது அனைவரினதும் நோக்கமாகும் எனவும், ஆனால் இன்னும் கூட இந்நாட்டு மக்களின் மனித உரிமைகளை மீறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

சில மனித்தியாங்களுக்கு முன்னர்கூட, மாணவ செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள தாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இளைய தலைமுறை மர்மமான முறையில் கடத்தப்பட்ட வண்ணமுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டில் இருபது இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு நிவாரணமும் ஊட்டச்சத்து ஆற்றல் தேவைப்பாடும் உள்ளதாகவும், அந்த ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்யத் தேவையான அளவு நிதி கூட நாட்டில் இல்லாத நிலை உருவாகி வருவதாக வும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டின் தாய்மார்கள், பிள்ளைகள், பிரஜைகள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக விசேட தலையீடு செய்ய வேண்டிய தருணம் வந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இத்தகைய தருணத்தில், நாட்டுக்கு கேடு விளைவிக் கும் எந்த செயற்பாட்டிலும் ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஈடுபடாது எனவும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், புத்திஜீவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஐ.டி.எம். கல்வி நிறுவனத்தின் தலைசாளரும் தேசிய ஒருமைப்பாட்டு முன்னணியின் தலைவருமு ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி.ஜனகனின் ஏற்பாட்டில், வடகொழும்பு பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களுக்கு சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவர் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பொன்னான்டோ தலைமையில் கொழும்பு-13, புதுச்செட்டித்தெரு வியாகுலமாதா கிறிஸ்தவ ஆலயத்தில் உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: எம்.நசார்)

ஷவேந்திர சில்வாவை தடைசெய்யுமாறு வலியுறுத்தி பிரித்தானியாவில் பிரசாரம்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையின் முப்படைகளின் பிரதானி ஷவேந்திர சில்வாவை பிரித்தானிய அரசு தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தி அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மகஜர் கையளிக்கப்பட்டு வருவதுடன், தொடர்ந்தும் பிரசார நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யுத்த குற்றவாளியாகக் கருதப்படும் ஷவேந்திர சில்வாவை பிரித்தானிய அரசு தடை செய்ய பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியும், போர்க்குற்றத்திற்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களால் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் கையளிக்கப்பட்டு வருவதுடன், பிரசார நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, போர் விதிமுறைகளை மீறியதற்காக இலங்கை இராணுவ அதிகாரிகள்

58பேரை கைது செய்ய வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஹெரோயினுடன் அநுராதபுரத்தில் இளைஞர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரத்தில் 60கிராமிற்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய, அநுராதபுரம் பொத்தனேகம பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது, சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் 60கிராமும் 250மில்லிலிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளினை அநுராதபுரம் வலய குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சோதனை செய்யப்பட்டவர் 22 வயதுடைய கெழுதுமாவத்த பொத்தானேகம பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசார ணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இருவேறு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

ஹொரணை மற்றும் மீட்டியாகொட பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஹொரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பானந்துரை – ஹொரண பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதசாரி மீது மோதியுள்ளதால் அவர் உயிரிழந்துள்ளார்.

வெரலஹேன பகுதியைச் சேர்ந்த 51 வயதான நபரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மீட்டியாகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு – காலி பிரதான வீதி சீனிகமவில் வாகனம் ஒன்றில் மோதியதால் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வாகனத்தில் மோதுண்டு நபர் ஒருவர் வீதியில் உயிரிழந்து கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதேநபர் மோதிய வாகனம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

Birmingham Commonwealth Games - 2022 கோலாகலமாக நிறைவு

★ சம்பியனான அவுஸ்திரேலியா
★ நான்கு பதக்கங்களுடன் 31ஆவது இடத்தில் இலங்கை
★ அடுத்த தொடர் விக்டோரியாவில்

BIRMINGHAM 2022 commonwealth games

commonwealth sport

ஏ. அகீல் சிஹாப்

பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகளுக்கு இடையில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் 22ஆவது தொடர் இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் அமைந்துள்ள அலெக்சாண்டர் அரங்கில் கடந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று முன்தினம் இரவு கோலாகலமாக கலை நிகழ்வுகளுடன் நிறைவுக்கு வந்தது.

2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் சுமார் 72 நாடுகளைச் சேர்ந்த 5,054 விளையாட்டு வீரர்கள் தடகளம், பேட்மின்டன், ஹொக்கி, குத்துச்சண்டை, பளு தூக்குதல், கிரிக்கெட் உள்ளிட்ட 280 போட்டிகளில் விளையாடியிருந்தனர்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் முதன்முறையாக மகளிர் கிரிக்கெட் இடம்பெற்றது.

இதற்கு முன்னர் ஒரேயொரு தடவை ஆடவருக்கான கிரிக்கெட் இடம்பெற்றிருந்த நிலையில், முதல் முறையாக மகளிர் கிரிக்கெட் இடம்பெற்றிருந்தது.

MEDAL TABLE

	GOLD	SILVER	BRONZE	TOTAL
Australia	67	57	54	178
England	57	66	53	176
Canada	26	32	34	92
India	22	16	23	61
New Zealand	20	12	17	49
Scotland	19	11	27	57
Nigeria	12	9	14	35
Wales	8	6	14	28

இதில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியை தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக ஒரு மாற்றுத்திறனாளி உட்பட 110 வீர, வீராங்கனைகள் 14 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றிருந்தனர். இலங்கை ஒரு வெள்ளி, 3 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 4 பதக்கங்களை வென்றது.

இலங்கை வென்ற பதக்கங்களின் விபரம்

டிலங்க இசுரு குமார – பளு தூக்கல்

இலங்கைக்கான முதல் பதக்கத்தை பளு தூக்கல் வீரர் டிலங்க இசுரு குமார வென்றார். அவர் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற ஆண்களுக்கான 55 கிலோகிராம் எடைப்பிரிவில் மொத்தமாக 225 கிலோகிராம் எடையை தூக்கி வெண்கலப் பதக்கத்தை வெற்றிகொண்டார். இவர் ஆரம்ப சற்றான ஸ்னெட்ச் முறையில் 105 கிலோகிராம் எடையை தூக்கியதுடன், கிளீன் மற்றும் ஜெக் முறையில் 120 கிலோ எடையை தூக்கியிருந்தார். இதில் கிளீன் மற்றும் ஜெக் முறையில் 137 மற்றும் 141 கிலோகிராம் எடைகளை தூக்கும் முயற்சியை இவர் மேற்கொண்டிருந்தாலும் அது அவருக்கு பயனளிக்கவில்லை.

இப்போட்டியில் தங்கப் பதக்கத்தை மலேசிய வீரர் பின் கஸ்டன் வென்றதுடன், வெள்ளிப் பதக்கத்தை இந்திய வீரர் சன்கெட் மஹாதேவ் வென்றார்.

யுபுன் பிரியதர்ஷன அபேகோன் - 100 மீற்றர் ஓட்டம்

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தெற்காசியாவின் அதிவேக மனிதன் என்ற பெருமையைப் பெற்றுள்ள யுபுன் பிரியதர்ஷன அபேகோன் கடந்த 3ஆம் திகதி வெண்கலப் பதக்கத்தை வென்றார். குறித்த 100 மீற்றர் பந்தைய தூரத்தை 10.14 செக்கன்களில் நிறைவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வெற்றிகொண்டார்.

பொதுநலவாய போட்டிகளில் சுவட்டு நிகழ்ச்சிகளில் இலங்கைக்கு பதக்கம் வென்றுகொடுத்த நான்காவது வீரர் என்ற பெருமையை யுபுன் அபேகோன் பெற்றுக்கொண்டார். மேலும் பொதுநலவாய விளையாட்டு விழாவின் 100 மீற்றர் ஓட்டத்தில் இலங்கைக்கு பதக்கம் வென்றுகொடுத்த முதல் வீரர் என்ற பெருமையையும் யுபுன் அபேகோன் பெற்றுக்கொண்டார்.

இறுதிப்போட்டியில் கென்ய வீரர் பெர்டினாண்ட் ஓமயாலா போட்டித்தூரத்தை 10.02 செக்கன்களில் கடந்து தங்கம் வென்றிருந்ததுடன், தென்னாபிரிக்க வீரர் அகானி சிம்பன் 10.13 செக்கன்களில் போட்டித்தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பாலித்த பண்டார – பரா பரிதி வட்டம் எறிதல்

மாற்றுத்திறனாளிகளுக்கான பரா பரிதி வட்டம் எறிதல் போட்டியில் எவ்42 பிரிவு போட்டியில் கடந்த 3ஆம் திகதி பங்கேற்ற பாலித்த பண்டார வெள்ளிப் பதக்கம் வென்றார். பாலித்த பண்டார தனது முதல் முயற்சியில் 39.54 மீற்றர் தூரத்துக்கு பரிதி வட்டத்தை எறிந்து குறைந்த தூரத்துடன் போட்டியை ஆரம்பித்திருந்தாலும், அடுத்தடுத்த வாய்ப்புகள் ஒவ்வொன்றிலும் தூரத்தை அதிகரித்துக்கொண்டு 44.20 மீற்றர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இந்தப் போட்டியில், வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த அலெட்டேவிஸ் மற்றும் ஹெரிஸன் வோல்ஸ் ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை வெற்றிகொண்டனர். 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு கிடைத்த ஒரேயொரு வெள்ளிப் பதக்கமாகவும் இது பதிவானது.

நெத்மி பொருதொடகே – மல்யுத்தம்

பெண்களுக்கான 57 கிலோகிராம் எடைப்பிரிவின் மல்யுத்தப் போட்டியில் பங்கேற்ற நெத்மி பொருதொடகே இலங்கைக்காக வெண்கலப் பதக்கத்தை வென்றுகொடுத்தார். கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கெமரூன் வீராங்கனை ஜோசப் எமிலின்னேவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறிய நெத்மி பொருதொடகே, அரையிறுதியில் இந்திய வீராங்கனை அன்சு மலிக்கை எதிர்கொண்டார்.

அரையிறுதிப் போட்டியில் 0-10 என தோல்வியடைந்த நெத்மி பொருதொடகே, மூன்றாவது இடத்துக்கான போட்டியில் அவுஸ்திரேலிய வீராங்கனை இரீனி சைமெண்டிஸை 10-0 என வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை வெற்றிகொண்டார்.

சம்பியனான அவுஸ்திரேலியா

2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆரம்பம்முதல் பதக்க வேட்டையில் ஆதிக்கம் செலுத்திய அவுஸ்திரேலியா, இறுதியில் 67 தங்கம், 57 வெள்ளி, 54 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 178 பதக்கங்களை வென்று சம்பியனானது.

57 தங்கம், 66 வெள்ளி, 53 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக மொத்தமாக 176 பதக்கங்களுடன் தொடரை நடத்தும் இங்கிலாந்து இரண்டாவது இடத்தைப் பிடித்தது. 26 தங்கம், 32 வெள்ளி, 34 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 92 பதக்கங்களை வென்று கனடா மூன்றாவது இடத்தைப் பிடித்தது. நமது அண்டை நாடான இந்தியா 22 தங்கம், 16 வெள்ளி, 23 வெண்கலம் என மொத்தமாக 61 பதக்கங்களுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது.

இலங்கைக்கு 31ஆவது இடம்

ஒரு வெள்ளி, 3 வெண்கலம் என மொத்தமாக 4 பதக்கங்களை வென்ற இலங்கை, ஒட்டுமொத்த பதக்கப்பட்டியலில் 31ஆவது இடத்தைப் பிடித்தது.

அடுத்த தொடர் விக்டோரியாவில்

22ஆவது தொடர் பேர்மிங்ஹாமில் நிறைவடைந்திருக்கும் நிலையில் 23ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாவது முறையாக அவுஸ்திரேலியாவின் விக்டோரியாவில் நடைபெறவுள்ளது.

ஆயிரம் தங்கங்களை வென்ற முதல் நாடு

பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் 1,000 தங்கப் பதக்கங்களை வென்ற முதல் நாடு என்ற பெருமையை அவுஸ்திரேலியா பெற்றது. வலைபந்து இறுதிப் போட்டியில் ஜமேக்காவை எதிர்த்து அவுஸ்திரேலியா வெற்றி பெற்ற பிறகு இந்த மைல்கல்லை எட்டியது. ஆடவர் ஹொக்கி இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக பெற்ற வெற்றியுடன் இறுதி நாளில் அவுஸ்திரேலியாவின் தங்கப் பதக்க எண்ணிக்கை 1,001 ஆக உயர்ந்தது.

அதிக பதக்கங்களை வென்ற எம்மா

அவுஸ்திரேலிய நீச்சல் வீராங்கனை எம்மா மைக்கோன் ஆறு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றதன் மூலம், 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் அதிக பதக்கங்கள் பெற்ற வீராங்கனையானார். இது அவரது தொழில் வாழ்க்கையில் 20 பதக்கங்களாகும். அவற்றில் 14 தங்கங்கள்.

ஆக்லாந்தில் 1990 முதல் ஒவ்வொரு தொடர்களிலும் அவுஸ்திரேலியா பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. கிளாஸ்கோ 2014 இல் மாத்திரம் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

டேவிட் டிக்சன் விருதை வென்ற சிங்கப்பூர் வீராங்கனை

இந்த ஆண்டு போட்டித்தொடரின் சிறந்த விளையாட்டு வீரருக்கான டேவிட் டிக்சன் விருதை சிங்கப்பூர் டேபிள் டென்னிஸ் வீரரான பெங் தியான்வீ வென்றார்.

இந்த ஆண்டு இவர், 3 தங்கப் பதக்கங்களை வென்றதுடன், பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் மொத்தமாக 9 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7